المبادئ المفيدة
في
التوحيد والفقه والعقيدة

தவ்ஹீத் , பிக்ஹ் , அகீதா ஆகிய விடயங்களில் பயன்தரும் அடிப்படைகள்

அஷ்ஷெய்க் அபூ அப்திர்-ரஹ்மான் யஹ்யா இப்னு
அலி அல்-ஹஜூரி ஹபிழஹுல்லாஹ்

தமிழாக்கம்:
அபூ அப்திர்-ரஹ்மான் அப்துல் ரஸ்ஸாக் இப்னு
நஸார் அஸ்ஸெய்லானி

தாருல் ஹதீஸ் அஸ்ஸலபிய்யாஹ் கலாபீடம்
இலங்கை.

.1 إِذَا قِيْلَ لَكَ: مَنْ خَلَقَكَ؟ فَقُلْ: خَلَقَنِي اللهُ، وَخَلَقَ جَمِيْعَ المَخْلُوقَاتِ

1. கேள்வி: உன்னைப் படைத்தவன் யார்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: என்னைப் படைத்தவன் அல்லாஹ் மேலும் அவன்தான் அனைத்துப் படைப்பினங்களையும் படைத்தான் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿اللهُ خَالِقُ كُلِّ شَيْءٍ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
“அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன்” (அஸ்ஸுமர்: 62)

.2 إِذَا قِيْلَ لَكَ: مَنْ رَبُّكَ؟ فَقُلْ: اَللهُ رَبِّي وَرَبُّ كُلِّ شَيْءٍ

2. கேள்வி: உன்னுடைய இரட்சகன் யார்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: என்னுடைய இரட்சகனும் மேலும் அனைத்து வஸ்துக்களின் இரட்சகனும் அல்லாஹ் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿ قُلْ أَغَيْرَ اللهِ أَبْغِي رَبًّا وَهُوَ رَبُّ كُلِّ شَيْءٍ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
“அல்லாஹ்வை அன்றி மற்றெவரையாவது நான் இறைவனாக எடுத்துக் கொள்வேனா? எல்லாப் பொருட்களுக்கும் அவனே இறைவனாக இருக்கின்றான்என்று (நபியே!) நீர் கூறும்.” (அல்-அன்ஆம் 164).

وَقَوْلُهُ تَعَالَى: ﴿اَلْحَمْدُ لِلهِ رَبِّ الْعٰلَمِيْنَ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று:
“அனைத்து புகழும், அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயனான) அல்லாஹ்வுக்கே ஆகும்.”(அல்பாதிஹா: 02)

.3 إِذَا قِيْلَ لَكَ: لِمَاذَا خَلَقَكَ اللهُ؟ فَقُلْ: خَلَقَنَا لِعِبَادَتِهِ

3. கேள்வி: உன்னை அல்லாஹ் எதற்காகப் படைத்தான்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,
விடை: அவனை வணங்குவதற்காக அவன் எங்களைப் படைத்தான் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை." (ஸூரதுத் தாரியாத்: 56)

4. إِذَا قِيْلَ لَكَ: مَا دِيْنُكَ؟ فَقُلْ: دِيْنِي هُوَ دِيْنُ الإِسْلَامِ الْحَقُّ

4. கேள்வி: உன்னுடைய மார்க்கம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: என்னுடைய மார்க்கம் சத்திய இஸ்லாம் மார்க்கமாகும் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّ الدِّينَ عِنْدَ اللهِ الْإِسْلامُ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "நிச்சயமாக இஸ்லாம்தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும்." (ஸூரது ஆல இம்ரான்:19)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿هُوَ الَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِالْهُدَى وَدِينِ الْحَقِّ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "அவனே தன் தூதரை நேர் வழியுடனும், சத்திய மார்க்கத்துடனும் அனுப்பி வைத்தான்" (ஸூரதுத் தவ்பா: 33)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது; மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார்." (ஸூரது ஆல இம்ரான்:85)[1]

[1] இஸ்லாம் என்பது (ஸிராதுல் முஸ்தகீம்) அது நேரான ஒரு பாதையாகும்.
இதற்கான ஆதாரம் - நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீஸாகும்:

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "... மேலும் (நேரான) பாதை என்பது இஸ்லாமாகும்...." (அஹ்மத்: 4/182) மேலும் இது ஒரு சரியான (ஸஹீஹான) செய்தியாகும்.
எனவே எவர் அதன் மீது உறுதியாக இருக்கின்றாரோ; நரகத்தின் மீது நீட்டப்படும் பாலத்தின் அந்தப் பாதையின் மீது அல்லாஹ் நாடினால் அவர் உறுதியாக இருப்பார்.

﴿وَاِنْ مِّنْكُمْ اِلَّا وَارِدُهَا كَانَ عَلٰى رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا﴾ ﴿ثُمَّ نُـنَجِّى الَّذِيْنَ اتَّقَوْا وَّنَذَرُ الظّٰلِمِيْنَ فِيْهَا جِثِيًّا﴾

இதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "மேலும், அதனைக் கடக்காமல் உங்களில் யாரும் (போக) முடியாது; இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும். அதன் பின்னர், தக்வாவுடன் - பயபக்தியுடன் இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம்; ஆனால், அநியாயம் செய்தவர்களை அ(ந் நரகத்)தில் முழந்தாளிட்டவர்களாக விட்டு விடுவோம்." (ஸூரது மர்யம்:71 , 72)

மேலும் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்: நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ".....மேலும் அமானிதமும்; இரத்தபந்த உறவும் அனுப்பிவைக்கப்படும். அவை இரண்டும் அப்பாலத்தின் இரு மருங்கிலும் வலம் இடமாக நின்றுகொள்ளும். உங்களில் முதலாமவர்கள் மின்னல் போன்று (அப்பாலத்தைக்) கடப்பார்கள். பிறகு காற்று வீசுவதைப் போன்றும், பறவை பறப்பதைப் போன்றும், மனிதர்கள் விரைந்து ஓடுவதைப் போன்றும் கடப்பார்கள். இறைநம்பிக்கையாளர்களை அழைத்துக்கொண்டு அவர்களின் (நற்)செயல்கள் ஓடும்... இறுதியில் அடியார்களின் செயல்கள் செயலிழந்துபோகும்... அப்போது ஒருவர் வருவார். அவரால் நடக்க முடியாமல் தவழ்ந்தபடியே (அதைக் கடந்து) செல்வார். அந்தப் பாலத்தின் இரு ஓரங்களிலும் கொக்கிகள் மாட்டப்பட்டிருக்கும். சிலரைப் பிடிக்கும்படி அவற்றுக்கு உத்தரவிடப்பட்டிருக்கும்.
சிலர் காயப்படுத்தப்பட்டுத் தப்பிவிடுவர்; சிலர் நரக நெருப்பில் தள்ளப்படுவர். (முஸ்லிம்)

மேலும் இமாம் புஹாரி ரஹிமஹுல்லாஹ் அபூஸஈத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீஸிலிருந்து அறிவிக்கின்றார்கள்: நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "பாலம் கொண்டுவரப்படும். மேலும் நரகத்தினுடைய இரு மருங்குகளுக்கு மத்தியில் அது வைக்கப்படும். அப்போது நாங்கள் கேட்டோம்; அல்லாஹ்வின் தூதரே! பாலம் என்றால் என்ன? அதற்கு அவர்கள், வழுக்கிவிடக்கூடியதாகவும், தடம் பிரலச் செய்யக்கூடியதாகவும் இருக்கும். அதன் மீது நகங்களும் கொக்கிகளும் காணப்படும். (அவர்களில்) தப்பியவர்களில் ஈடேற்றம் பெற்றவர்கள் இருப்பார்கள். மேலும் தப்பியவர்களில் அவைகளினால் கீறிக் காயப்படுத்தப்பட்டுத் தப்பியவர்களும் இருப்பார்கள். மேலும் அவர்களில் ஜஹன்னம் எனும் நரகத்திலே தள்ளப்படுபவர்களும் இருப்பார்கள்."

.5 فَإِذَا قِيْلَ لَكَ: مَنْ نَبِيُّكَ؟ فَقُلْ: نَبِيِّيْ وَنَبِيُّ هَذِهِ الأُمَّةِ جَمِيْعًا هُوَ مُحَمَّدٌ رَسُوْلُ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعلَى آلِهِ وَسَلَّمَ

05. கேள்வி: உன்னுடைய நபி யார்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: என்னுடைய நபியும் மேலும் இந்த உம்மத்தினர் அனைவருடைய நபியும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் ஆவார்கள் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿مَا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِنْ رِجَالِكُمْ وَلَكِنْ رَسُولَ اللهِ وَخَاتَمَ النَّبِيِّينَ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
“முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை; ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்;” (அல்-அஹ்ஸாப்: 40)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿هُوَ الَّذِي بَعَثَ فِي الْأُمِّيِّينَ رَسُولًا مِنْهُمْ يَتْلُوا عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ وَإِنْ كَانُوا مِنْ قَبْلُ لَفِي ضَلَالٍ مُبِينٍ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று:
“அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்; அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்.” (அல்-ஜுமுஅ: 2)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿فَآمِنُوا بِاللهِ وَرَسُولِهِ النَّبِيِّ الْأُمِّيِّ الَّذِي يُؤْمِنُ بِاللهِ وَكَلِمَاتِهِ وَاتَّبِعُوهُ لَعَلَّكُمْ تَهْتَدُونَ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று:

“ஆகவே, அல்லாஹ்வின் மீதும், எழுதப்படிக்கத்தெரியாத நபியாகிய அவன் தூதரின் மீதும் ஈமான் கொள்ளுங்கள், அவர் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார் - அவரையே பின்பற்றுங்கள்; நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்.” (ஸூரதுல் அஃராப்: 158)

மேலும் 08வது கேள்வியைப் பார்க்கவும்.

6. فَإِذَا قِيْلَ لَكَ: مَا أَوَّلُ وَاجِبٍ عَلَى الْعَبْدِ؟ فَقُلْ: تَعَلُّمُ تَوْحِيْدِ اللهِ عَزَّ وَجَلَّ

6. கேள்வி: அடியானின் மீது உள்ள முதற்கடமை என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: கண்ணியமான மேலும் மகத்துவம் பெற்ற அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதைக் கற்றுக் கொள்வதாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ ابْنِ عَبَّاسٍ –رَضِيَ اللهُ عَنْهُمَا– قالَ: لَمَّا بَعَثَ النَّبِيُّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– مُعَاذَ بْنِ جَبَلٍ إِلَى الْيَمَنِ قَالَ لَهُ: ((إِنَّكَ تَقْدُمُ عَلَى قَوْمٍ مِنْ أَهْلِ الْكِتَاب، فَلْيَكُنْ أَوَّلَ مَا تَدْعُوْهُمْ إِلَى أَنْ يُوَحِّدُوْا اللهَ تَعَالَى)). مُتَّفَقٌ عَلَيْهِ، وَهَذَا لَفْظُ الْبُخَارِيِّ

அதற்கான ஆதாரம்: இப்னு அப்பாஸ் றழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் ஹதீஸாகும்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் முஆத் இப்னு ஜபல் றழியல்லாஹு அன்ஹு அவர்களை யமன் தேசத்திற்கு அனுப்பி வைத்தபோது அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: [[நிச்சயமாக நீ வேதம் கொடுக்கப்பட்டவர்களில் நின்றும் உள்ள ஒரு கூட்டத்தாரிடம் செல்கின்றாய்; எனவே அவர்களை நீ அழைக்கும் முதல் அழைப்பு, உயர்ந்தவனாகிய அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதாக இருக்கட்டும்.]] (புஹாரி, முஸ்லிம்) மேலும் இது இமாம் புஹாரியுடைய வாசகமாகும்.

7. فَإِذَا قِيْلَ لَكَ: مَا مَعْنَى لَا إِلَهَ إِلَّا اللهُ؟ فَقُلْ: مَعْنَاهَا: لَا مَعْبُوْدَ بِحَقٍّ إِلَّا اللهُ

7. கேள்வி: லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அதனுடைய பொருள் அல்லாஹ்வைத் தவிர உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் வேறு யாருமில்லை. என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿فَاعْلَمْ أَنَّهُ لَآ إِلَهَ إِلَّا اللهُ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
"நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் வேறு யாருமில்லை என்பதை நீ (உறுதியாக) அறிந்து கொள்வீராக." (ஸூரது முஹம்மத் 19)

وَقَوْلُهُ: ﴿ذَلِكَ بِأَنَّ اللهَ هُوَ الْحَقُّ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று:
"நிச்சயமாக அல்லாஹ் அவனே உண்மையானவன்." (ஸூரத்துல் ஹஜ் 62)

.8 فَإِذَا قِيْلَ لَكَ: مَا مَعْنَى مُحَمَّدٌ رَسُوْلُ اللهِ؟فَقُلْ: مَعْنَاهَا أَنَّهُ رَسُوْلُ اللهِ إِلَى النَّاسِ كَافَّةً، مِنَ الجِنِّ وَالإِنْسِ

8. கேள்வி: முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் என்பதன் பொருள் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அதனுடைய பொருளாவது, நிச்சயமாக அவர் ஜின் இனத்திற்கும் மேலும் மனித இனத்திற்கும் மக்கள் அனைவருக்கும் அல்லாஹ்வுடைய தூதராக இருக்கின்றார். என்று நீ கூறு.[2]

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا كَافَّةً لِلنَّاسِ﴾

---

[2] ஜின் இனத்திற்கு மக்கள் என்று சொல்லப்படும். ஸஹீஹுல் புஹாரியிலே இலக்கம் 4714வது ஹதீஸில் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதர்களில் சில மக்கள் ஜின்களில் சில மக்களை வணங்கக்கூடியவர்களாக இருந்தார்கள். அந்த ஜின் இனம் இஸ்லாத்தைத் தழுவியது. மேலும் அவர்கள் அவர்களுடைய மார்க்கத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டனர்.

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
“இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே யன்றி (வேறெவ்வாறும்) அனுப்பவில்லை;” (ஸூரத்துஸ் ஸபா: 28)

وعَن أَبِي هُرَيْرَةَ – رَضِيَ اللهُ عَنْهُ – أَنَّ النَّبِيَّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ – قَالَ ((... وَأُرسِلْتُ إِلَى الخَلْقِ كَافَّةً)).

மேலும் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:
[[நான் படைப்பினங்கள் அனைத்திற்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன்.]] (முஸ்லிம்)

وَيَجِبُ عَلَيْنَا جَمِيْعًا طَاعَتُهُ وَتَصْدِيْقُهُ وَاجْتِنَابُ مَا نَهَى عَنْهُ

அவருக்கு வழிப்படுவது, அவரை உண்மைப்படுத்துவது, அவர் தடுத்தவற்றை விட்டும் தவிர்ந்து நடப்பது எங்கள் அனைவரின் மீதும் கடமையாகும்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿قُلْ أَطِيعُوا اللهَ وَأَطِيعُوا الرَّسُولَ﴾

மேலும் அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
“அல்லாஹ்வுக்கு நீங்கள் கீழ்படியுங்கள்; இன்னும் (அவனுடைய) ரஸூலுக்கும் (தூதருக்கும்) கீழ்ப்படியுங்கள்” என்று (நபியே!) நீர் கூறுவீராக;” (ஸூரத்துன் நூர்: 54)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿هَذَا مَا وَعَدَ الرَّحْمَنُ وَصَدَقَ الْمُرْسَلُونَ﴾

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று:
“அர்ரஹ்மான் வாக்களித்ததும், (அவனுடைய) தூதர்கள் உண்மையெனக் கூறியதும் இதுதான்.” (ஸூரது யாஸீன்: 52)

وَعَنْ أَبِي هُرَيْرَةَ –رَضِيَ اللهُ عَنْهُ– قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ–: ((مَا نَهَيْتُكُمْ عَنْهُ فَاجْتَنِبُوْهُ وَمَا أَمَرْتُكُمْ بِهِ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُم)) مُتَّفَقٌ عَلَيْهِ

மேலும் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நான் எதை விட்டும் உங்களைத் தடுத்திருக்கின்றேனோ

அதைவிட்டும் தவிர்ந்து தூரமாகுங்கள். மேலும் எதை நான் உங்களுக்கு கட்டளை இட்டிருக்கின்றேனோ அதிலிருந்து உங்களுக்கு முடியுமான அளவு எடுத்து நடவுங்கள்.]] (புஹாரி, முஸ்லிம்)

9. فَإِذَا قِيْلَ لَكَ: مَا حَقُّ اللهِ عَلَى عِبَادِهِ؟ فَقُلْ: حَقُّ اللهِ عَلَى عِبَادِهِ أَنْ يَّعْبُدُوْهُ وَلَا يُشْرِكُوْا بِهِ شَيْئًا

9. கேள்வி: அல்லாஹ்வுடைய அடியார்களின் மீது அவனுக்கு (அல்லாஹ்வுக்கு) இருக்கின்ற உரிமை என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அல்லாஹ்வுடைய அடியார்கள் மீது அவனுக்கு (அல்லாஹ்வுக்கு) இருக்கின்ற உரிமை அவர்கள் அவனை வணங்குவதும் மேலும் அவனுக்கு எந்த ஒன்றைக் கொண்டும் இணைவைக்காமல் இருப்பதுமாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ مُعَاذِ بْنِ جَبَلٍ أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((حَقُّ اللهِ عَلَى الْعِبَادِ أَنْ يَّعْبُدُوْهُ وَلَا يُشْرِكُوْا بِهِ شَيْئًا، وَحَقَّ الْعِبَادِ عَلَى اللهِ أَلَّا يُعَذِّبَ مَنْ لَا يُشْرِكُ بِهِ شَيْئًا)) مُتَّفَقٌ عَلَيْهِ

அதற்கான ஆதாரம்: முஆத் இப்னு ஜபல் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

[[அடியார்களின் மீது அல்லாஹ்வுக்கு இருக்கின்ற உரிமையானது அவர்கள் அவனையே வணங்குவதும் மேலும் அவர்கள் அவனுக்கு எந்த ஒன்றைக் கொண்டும் இணைவைக்காமல் இருப்பதுமாகும். மேலும் அல்லாஹ்வின் மீது அடியார்களுக்கு இருக்கின்ற உரிமையானது எவரெல்லாம் அவனுக்கு எந்த ஒன்றைக் கொண்டும் இணைவைக்கவில்லையோ அவனை வேதனை செய்யாமல் இருப்பதாகும்.]] (புஹாரி, முஸ்லிம்)

10. فَإِذَا قِيْلَ لَكَ: مَا هُوَ الشِّرْكُ؟ فَقُلْ: هُوَ عِبَادَةُ غَيرِ اللهِ عَزَّ وَجَلَّ، فَكُلُّ مَا كَانَ عِبَادَةً لِلهِ عَزَّ وَجَلَّ فَصَرْفُهُ لِغَيْرِ اللهِ شِرْكٌ

10. கேள்வி: ஷிர்க் (இணைவைத்தல்) என்றால் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: கண்ணியமான மேலும் மகத்துவமிக்க அல்லாஹ் அல்லாத வேறுவிடயங்களை வணங்குவதாகும். என்று நீ கூறு. எனவே கண்ணியமான மேலும் மகத்துவமிக்கவனாகிய அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அல்லாஹ் அல்லாதவர்களுக்குத் திருப்புவதே (இணைவைப்பாகும்) ஷிர்க்காகும்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَاعْبُدُوا اللهَ وَلا تُشْرِكُوا بِهِ شَيْئًا﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள்.” (ஸூரதுன் நிஸா 36)

.11 فَإِذَا قِيْلَ لَكَ: فَمَا حُكْمُ تَصْوِيْرِ ذَوَاتِ الْأَرْوَاحِ؟

فَقُلْ: تَصْوِيْرُ ذَوَاتِ الْأَرْوَاحِ مِنْ كَبَائِرِ الذُّنُوْبِ

11. கேள்வி: உயிருள்ளவற்றை உருவம் அமைப்பதன் சட்டம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: உயிருள்ளவற்றை உருவம் அமைப்பது பெரும் பாவங்களில் நின்றும் உள்ளதாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ ابْنِ مَسْعُوْدٍ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: ((إِنَّ أَشَدَّ النَّاسِ عَذَابًا يَوْمَ الْقِيَامَةِ الْمُصَوِّرُوْنَ)) مُتَّفَقٌ عَلَيْهِ

அதற்கான ஆதாரம்: இப்னு மஸ்ஊத் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நிச்சயமாக மறுமை நாளிலே மக்களில் மிகக் கடுமையாக வேதனைக்கு உட்படுத்தப்படுபவர்கள் உருவமைப்பவர்களேயாவர்.]] (புஹாரி, முஸ்லிம்)

وَفِي حَدِيْثِ أَبِي جُحَيْفَةَ –رَضِيَ اللهُ عَنْهُ– قَالَ: نَهَى رَسُولُ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– عَنْ ثمَنِ الْكَلْبِ، وثمَنِ الدَّمِ... وَلَعَنَ الْمصَوِّرَ

மேலும் அபூ ஜுஹைபா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீஸிலே வருவதாவது, அவர்கள் கூறினார்கள்; அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், [[நாயை விற்று வரும் சம்பாத்தியத்தையும், இரத்தத்தை விற்று வரும் சம்பாத்தியத்தையும் தடுத்தார்கள். மேலும் உருவமைப்பவனைச் சபித்தார்கள்.]] (புஹாரி)

12. فَإِذَا قِيْلَ لَكَ: فَمَا تَعَلُّقُ تَصْوِيْرِ ذَوَاتِ الأَرْوَاحِ بِالشِّرْكِ؟ فَقُلْ: إِنَّ التَّصْوِيْرَ خَلْقٌ يَكُوْنُ بِهِ المُصَوِّرُ مُضَاهِيًا وُمُشَارِكًا لِلهِ عَزَّ وَجَلَّ فِي ذَلِكَ

12 கேள்வி: ஷிர்கி (இணைவைத்தலு)க்கும் உயிருள்ளவற்றை உருவம் அமைப்பதற்கும் உள்ள தொடர்பு என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: நிச்சயமாக உருவம் அமைப்பது என்பது படைத்தலாகும். உருவம் அமைப்பவர் இது விடயத்திலே அதன் காரணமாக கண்ணியமான மேலும் மகத்துவமிக்கவனாகிய அல்லாஹ்வுக்கு ஒப்பானவனாகவும் மேலும் கூட்டுச் சேர்பவனாகவும் ஆகிவிடுகின்றான்.

وَالدَّلِيْلُ حَدِيْثُ عَائِشَةَ –رَضِيَ اللهُ عَنْهَا– أن النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((أَشَدُّ النَّاسِ عَذَابًا يَوْمَ الْقِيَامَةِ الَّذِيْنَ يُضَاهُوْنَ بِخَلْقِ اللهِ)) مُتَّفَقٌ عَلَيْهِ

அதற்கான ஆதாரம்: ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[மறுமை நாளிலே மக்களில் மிகக் கடுமையாக வேதனைக்கு உட்படுத்தப் படுபவர்கள், அல்லாஹ்வுடைய படைப்புக்களுக்கு ஒப்பாகச் செய்தவர்களாவர்.]] (புஹாரி, முஸ்லிம்)

وَحَـدِيْثُ أَبِـي هُرَيْـرَةَ -رَضِـيَ اللهُ عَنْـهُ- أَنَّ النَّبِـيَّ -صَـلَّى اللهُ عَلَيْـهِ وَعَلَـى آلِـهِ وَسَـلَّمَ- قَـالَ: قَـالَ اللهُ تَعَـالَى وَمَـنْ أَظْلَـمُ مِمَّـــنْ ذَهَـــبَ يَخْلُـــقُ كَخَلْقِـــي... مُتَّفَـــقٌ عَلَيْـــهِ

மேலும் அபூ ஹுறைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீஸ்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உயர்ந்தவனாகிய அல்லாஹ் கூறினான்: [[என்னுடைய படைப்பைப் போன்று படைக்க நாடுபவனைவிட மிகப் பெரிய அநியாயக்காரன் யார்...]] (புஹாரி, முஸ்லிம்)

13. فَإِذَا قِيْلَ لَكَ: مَا تَعْرِيْفُ العِبَادَةِ؟ فَقُلْ: هِيَ اِسْمٌ جَامِعٌ لِكُلِّ مَا يُحِبُّهُ اللهُ وَيَرْضَاهُ

13. கேள்வி: இபாதஹ் (வணக்க வழிபாடு) உடைய வரைவிலக்கணம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது அல்லாஹ் எவைகளை விரும்பி மேலும் பொருந்திக் கொள்கின்றானோ அவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பெயர்ச் சொல்லாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُهُ تَعَالَى: ﴿إِنْ تَكْفُرُوا فَإِنَّ اللهَ غَنِيٌّ عَنْكُمْ وَلا يَرْضَى لِعِبَادِهِ الْكُفْرَ وَإِنْ تَشْكُرُوا يَرْضَهُ لَكُمْ﴾ الزمر: 7

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "அவனை நீங்கள் நிராகரித்துவிட்டால்; நிச்சயமாக அல்லாஹ் உங்களைவிட்டும் தேவையற்றவனாக இருக்கின்றான். எனினும், தன் அடியார்கள் (தன்னை) நிராகரிப்பதை அவன் விரும்புவதே இல்லை. நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவீர்களாயின், உங்களைப் பற்றி அவன் திருப்தியடைவான்" (ஸூரத்துஸ் ஸுமர்: 7)

14. فَإِذَا قِيْلَ لَكَ: أَيْنَ اللهُ؟ فَقُلْ: اَللهُ فِيْ السَّمَاءِ، مُسْتَوٍ عَلَى عَرْشِهِ

14. கேள்வி: அல்லாஹ் எங்கே உள்ளான்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அல்லாஹ் வானத்திற்கு மேலே தனது அர்ஷின் மீது உயர்ந்த நிலையில் உள்ளான். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿ءَأَمِنْتُمْ مَنْ فِي السَّمَاءِ أَنْ يَخْسِفَ بِكُمُ الْأَرْضَ فَإِذَا هِيَ تَمُورُ﴾ (الملك: 16)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "வானத்தில் இருப்பவன் உங்களைப் பூமியில் சொருகிவிடுவான் என்பதை பற்றி நீங்கள் அச்சமற்று இருக்கின்றீர்களா? அப்போது (பூமி) அதிர்ந்து நடுங்கும்." (ஸூரதுல் முல்க்: 16)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿الرَّحْمَٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوَىٰ﴾ (طه: 5)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "ரஹ்மான் (ஆகிய அல்லாஹ்) அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்துவிட்டான்". (ஸூரது தாஹா: 05)

وَحَدِيْثُ أَبِي هُرَيْرَةَ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: ((يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا حِيْنَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الْآخِرِ، يَقُوْلُ: مَنْ يَدْعُوْنِي فَأَسْتَجِيْبَ لَهُ، مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ، مَنْ يَسْتَغْفِرُنِيْ فَأَغْفِرَ لَهُ)) مُتَّفَقٌ عَلَيْهِ

மேலும் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீஸ்; அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

[[உயர்வும்; வளமும் மிக்க நம் இறைவன் ஒவ்வோர் இரவிலும், இரவின் இறுதி மூன்றில் ஒரு பகுதி இருக்கும்போது கீழ் வானிற்கு இறங்கிவந்து, என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அவருக்கு நான் விடையளிக்கிறேன். என்னிடம் யாரேனும் கேட்டால் அவருக்கு நான் கொடுக்கிறேன். என்னிடம் யாரேனும் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்]] என்று கூறுகின்றான். (புஹாரி, முஸ்லிம்)

மேலும் கீழ் இறங்குவது என்பது மிக உயர்ந்த இடத்திலிருந்துதான் இடம் பெறும்.

15. فَإِذَا قِيْلَ لَكَ: هَلِ اللهُ مَعَنَا؟ فَقُلْ: اللهُ عَزَّ وَجَلَّ مَعَنَا بِعِلْمِهِ

15. கேள்வி: அல்லாஹ் எங்களுடன் இருக்கின்றானா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: கண்ணியம் மிக்க மேலும் மகத்துவம் பொருந்திய இறைவன் அவனது அறிவைக் கொண்டு எங்களுடன் இருக்கின்றான் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَهُوَ مَعَكُمْ أَيْنَ مَا كُنْتُمْ﴾ (الحَدِيْدُ: 4)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
“மேலும் நீங்கள் எங்கிருந்தபோதிலும், அவன் உங்களுடன் இருக்கின்றான்.”
(ஸூரதுல் ஹதீத்: 04)

وَقَوْلُهُ: ﴿وَهُوَ اللهُ فِي السَّمَاوَاتِ وَفِي الْأَرْضِ يَعْلَمُ سِرَّكُمْ وَجَهْرَكُمْ وَيَعْلَمُ مَا تَكْسِبُونَ﴾ (الأنعام: 3)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: “இன்னும் வானங்களிலும் பூமியிலும் அவனே (ஏக நாயனாகிய) அல்லாஹ்; உங்கள் இரகசியத்தையும், உங்கள் பரகசியத்தையும் அவன் அறிவான்; இன்னும் நீங்கள் (நன்மையோ தீமையோ) சம்பாதிப்பதை எல்லாம் அவன் அறிவான்.” (ஸூரதுல் அன்ஆம்: 3)
இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: “இதன் மூலம் நாடப்படுவது என்னவென்றால்; நிச்சயமாக அல்லாஹ்வாகிய அவன் வானங்களிலும் பூமியிலும் இருக்கின்ற இரகசியமான; மேலும் பரகசியமான விடயங்களை எல்லாம் அறிந்தவனாக இருக்கின்றான் என்பதாகும்.”

16. فَإِذَا قِيْلَ لَكَ: مَا تَعْرِيْفُ الْإِسْلَامِ؟ فَقُلْ: هُوَ الْاِسْتِسْلَامُ لِلهِ بِالتَّوْحِيْدِ، وَالْاِنْقِيَادُ لَهُ بِالطَّاعَةِ، وَالْخُلُوْصُ مِنَ الشِّرْكِ

16. கேள்வி: இஸ்லாத்தின் வரைவிலக்கணம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது ஏகத்துவத்தைக் கொண்டு அல்லாஹ்வுக்கு சரணடைவதும்; மேலும் வழிப்படுவதில் அவனுக்குக் கட்டுப்படுவதும்; இணைவைப்பில் இருந்து நீங்கி இருப்பதுமாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿فَإِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ فَلَهُ أَسْلِمُوا وَبَشِّرِ الْمُخْبِتِينَ﴾ (الحج: 34)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று:
ஆகவே உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான்; எனவே அவ(ன் ஒருவ)னுக்கே நீங்கள் முற்றிலும் வழிப்படுங்கள்; "(நபியே!) உள்ளச்சம் உடையவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக!" (ஸூரதுல் ஹஜ்: 34)

وَقَوْلُهُ: ﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ﴾ آل عمران: 102

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்." (ஸூரது ஆல இம்ரான்: 102)

17. فَإِذَا قِيْلَ لَكَ: هَلْ دِيْنُ الْإِسْلَامِ كَامِلٌ، أَمْ يَحْتَاجُ إِلَى تَكْمِيلٍ؟ فَقُلْ: هُوَ دِيْنٌ كَامِلٌ

17. கேள்வி: இஸ்லாம் பூரணமான ஒரு மார்க்கமா? அல்லது பூரணத்துவத்தின் பக்கம் அது தேவை காணுகின்றதா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது பூரணமான ஒரு மார்க்கமாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا﴾ (المائدة: 3)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்கு நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகப்) பொருந்திக்கொண்டுள்ளேன்;" (ஸூரதுல் மாயிதா: 3)

.18 فَإِذَا قِيْلَ لَكَ: مِنْ أَيْنَ يَأْخُذُ المُسْلِمُ دِيْنَهُ؟ فَقُلْ: يَأْخُذُ المُسْلِمُ دِيْنَهُ مِنَ الْقُرْآنِ وَالسُّنَّةِ عَلَى فَهْمِ السَّلَفِ الصَّالِحِ

18. கேள்வி: ஒரு முஸ்லிம் அவனது மார்க்கத்தை எங்கிருந்து எடுக்க வேண்டும்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: ஒரு முஸ்லிம் அவனது மார்க்கத்தை அல்-குர்ஆனிலிருந்தும்; மேலும் அஸ்-ஸுன்னாவிலிருந்தும்; ஸலபுஸ்ஸாலிஹீன்களின் விளக்கத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿أَوَلَمْ يَكْفِهِمْ أَنَّا أَنْزَلْنَا عَلَيْكَ الْكِتَابَ يُتْلَى عَلَيْهِمْ﴾ (العنكبوت:51)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "நபியே அவர்களுக்கு ஓதிக்காட்டப்படும் இவ்வேதத்தை நாம் நிச்சயமாக உம் மீது இறக்கியிருக்கிறோம் என்பது அவர்களுக்குப் போதாதா?"

وَقَوْلُهُ تَعَالَى: ﴿فَإِنْ تَنَازَعْتُمْ فِي شَيْءٍ فَرُدُّوهُ إِلَى اللهِ وَالرَّسُولِ إِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ﴾ (النساء: 59)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்குப் பட்டுக்கொண்டால்; (மெய்யாகவே) நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் திருப்பிவிடுங்கள்." (ஸூரதுன் நிஸா: 59)

وَقَوْلُهُ تَعَالَى ﴿اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ * صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ﴾ (الفاتحة: 7,6)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக! (அது) நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழி. (அது) உன் கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல நெறி தவறியோர் வழியுமல்ல." (அல்-பாதிஹா:6, 7)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿وَمَنْ يُّشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَى وَيَتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّهِ مَا تَوَلَّى وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيْرًا﴾ (النساء: 115)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, முஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம்; அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்.." (ஸூரதுன் நிஸா: 115)

மேலும் இதற்குப் பின்னால் வரக்கூடிய ஹதீஸையும் நீ கவனித்துப்பார்.

19. فَإِذَا قِيْلَ لَكَ: مَا عَقِيْدَتُكَ؟ فَقُلْ: أَنَا سُنِّيٌّ سَلَفِيٌّ

19. கேள்வி: உன்னுடைய அகீதா (கொள்கைக் கோட்பாடு) என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: நான் சுன்னியாகவும், (அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னாவை சரியான முறையில் பின்பற்றுபவன்) ஸலபிய்யாகவும் (அல்-குர்ஆன், அஸ்ஸுன்னாவை ஸலபுஸ்ஸாலிஹீன்கள் விளக்கத்தின் அடிப்படையில் விளங்குபவன்) இருக்கின்றேன். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: ((فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الْمَهْدِيِّيْنَ الرَّاشِدِيْنَ، تَمَسَّكُوْا بِهَا وَعَضُّوْا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُوْرِ؛ فَإِنَّ كُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ، وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ)) أَخْرَجَهُ أَبُوْ دَاوُدَ وَغَيْرُهُ، وَهُوَ حَدِيْثٌ حَسَنٌ

அதற்கான ஆதாரம்: இர்பால் இப்னு ஸாரியாஹ் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[என்னுடைய ஸுன்னாஹ்வையும்; நேர்வழி பெற்ற சத்திய பாதைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபாக்க (ஆட்சியாளர்க)ளின் சுன்னாஹ்வையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவைகளைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; மேலும்

கடைவாய்ப் பற்களினால் அவைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். (மார்க்கத்தில்) புதிதாக உண்டுபன்னுவதை விட்டும் நான் உங்களை எச்சரிக்கின்றேன். ஏனெனில், ஒவ்வொரு புதிதான விடையமும் (பித்அத்தாகும்) நூதன அனுஷ்டானமாகும். ஒவ்வொரு நூதன அனுஷ்டானமும் வழிகேடாகும்.]] இமாம் அபூதாவூத், மற்றும் அவரல்லாதவர்களும் இதனை அறிவிக்கின்றார்கள். இது "ஹஸன்" எனும் தரத்திலுள்ள ஹதீஸாகும்.

20. فَإِذَا قِيْلَ لَكَ: مَنْ أَوَّلُ الرُّسُلِ إِلَى أَهْلِ الْأَرْضِ، وَمَنْ آخِرُهُمْ؟ فَقُلْ: أَوَّلُهُمْ نُوْحٌ عَلَيهِ السَّلَامِ، وَآخِرُهُمْ أَفْضَلُ الْأَنْبِيَاءِ نَبِيُّنَا مُحَمَّدٌ – صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ–، فَبِعْثَتُهُ أَوَّلُ الْعَلاَمَاتِ الصُّغْرَى لِلسَّاعَةِ، وَيَجِبُ عَلَيْنَا الْإِيْمَانُ بِهِمْ جَمِيْعًا

20. கேள்வி: பூமியில் உள்ளவர்களுக்கு அனுப்பப்பட்ட தூதர்களில் முதலாமவர் யார்? மேலும் அவர்களில் இறுதியானவர் யார்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அவர்களில் முதலாமவர் நூஹ் அலைஹிஸ்ஸலாம். மேலும் அவர்களில் இறுதியானவர் நபிமார்களில் மிகச் சிறந்தவரான எங்களுடைய நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம். என்று நீ கூறு. மேலும் மறுமை நாளின் சிறிய அடையாளங்ளில் முதன்மையானது அவரது நபித்துவமேயாகும். மேலும் அவர்கள் (நபிமார்கள்) அனைவரையும் ஈமான் கொள்வது எங்களின் மீது கடமையாகும்.

وَالدَّلِيْلُ حَدِيْثُ أَبِي هُرَيْرَةَ –رَضِيَ اللهُ عَنْهُ– أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ عَنْ أهْلِ الْمَحْشَرِ يَوْمَ الْقِيَامَةِ: ((فَيَأْتُوْنَ نُوْحًا فَيَقُوْلُوْنَ: يَا نُوْحُ، أَنْتَ أَوَّلُ الرُّسُلِ إِلَى أَهْلِ الْأَرْضِ، وَسَمَّاكَ اللهُ عَبْدًا شَكُوْرًا)) مُتَّفَقٌ عَلَيْهِ

அதற்கான ஆதாரம்: அபூ ஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் மறுமை நாளில் மஹ்ஷரில் நிற்கும் மக்களைப் பற்றிக் கூறும் போது இவ்வாறு கூறினார்கள்: [[அவர்கள் நூஹிடம் வந்து கூறுவார்கள்; நூஹே! பூமியில் உள்ளோர்களுக்கு அனுப்பப்பட்ட தூதர்களில் நீங்களே முதலாமவராக இருக்கின்றீர்கள்.

மேலும் உமக்கு நன்றியுள்ள அடியான் என்று அல்லாஹ் பெயர் சூட்டியுள்ளான்...]]” (புஹாரி, முஸ்லிம்)

وَالدَّلِيْلُ عَلَى أَنَّ آخِرَهُمْ مُحَمَّدٌ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَوْلُ اللهِ تَعَالَى: ﴿مَا كَانَ مُحَمَّدٌ أَبَا أَحَدٍ مِنْ رِجَالِكُمْ وَلَكِنْ رَسُولَ اللهِ وَخَاتَمَ النَّبِيِّينَ﴾ (الأحزاب: 40)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: நிச்சயமாக அவர்களில் இறுதியானவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் என்பதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை; என்றாலும் அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்.” (ஸூரதுல் அஹ்ஸாப்: 40)

وَحَدِيْثُ ثَوْبَانَ –رَضِيَ اللهُ عَنْهُ– أَنَّهُ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((وَأَنَا خَاتَمُ النَّبِيِّيْنَ لاَ نَبِيَّ بَعْدِي)) أَخْرَجَهُ مُسْلِمٌ

மேலும் ஸவ்பான் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நான் நபிமார்களுக்கு முத்திரையாவேன்; எனக்குப் பின்னால் எந்த ஒரு நபியும் இல்லை.]] (முஸ்லிம்)

وَالدَّلِيْلُ عَلَى أَنَّهُ أَفْضَلُ الْأَنْبِيَاءِ حَدِيْثُ أَبِي هُرَيْرَةَ –رَضِيَ اللهُ عَنْهُ– أَنَّ النَّبِي –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((أَنَا سَيِّدُ النَّاسِ يَوْمَ الْقِيَامَةِ)) مُتَّفَقٌ عَلَيْهِ

மேலும் அவர் நபிமார்களில் மிகச் சிறந்தவர் என்பதற்கான ஆதாரம்: அபூ ஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்; [[நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “மறுமை நாளிலே மக்களின் தலைவன் நான் ஆவேன்.]] (புஹாரி, முஸ்லிம்)

وَالدَّلِيْلُ عَلَى أَنَّهُ أَوَّلُ عَلامَاتِ السَّاعَةِ: حَدِيْثُ سَهْلِ بْنِ سَعْدٍ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: ((بُعِثْتُ أَنَا وَالسَّاعَةُ هَكَذَا)) وَأَشَارَ بِأُصْبُعَيْهِ (مُتَّفَقٌ عَلَيْهِ)

மேலும் அவர் மறுமை நாளின் அடையாளங்களில் முதலாமவர் என்பதற்கான ஆதாரம்: ஸஹ்ல் இப்னு ஸஃத் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்; நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நானும் மருமை நாளும் இப்படி அனுப்பப்பட்டுள்ளோம். என்று கூறி, தமது இரண்டு விரல்களையும் சுட்டிக் காட்டினார்கள்.]] (புஹாரி, முஸ்லிம்)

وعن أَنَسِ بْنِ مَالِكٍ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النبَّي -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: ((بُعِثْتُ أَنا وَالسَّاعَةُ كَهَاتَيْنِ)) وَضَمَّ السَّبَّابَةَ وَالْوُسْطَى (مُتَّفَقٌ عَلَيْهِ)

மேலும் அனஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நானும் மருமை நாளும் இந்த இரண்டைப் போன்று அனுப்பப்பட்டுள்ளோம்.]] (சுட்டுவிரல், நடுவிரல் ஆகிய இரண்டையும் இணைத்தார்கள்) (புஹாரி, முஸ்லிம்)

وَالدَّلِيْلُ أَنَّهُ يَجِبُ عَلَيْنَا الْإِيْمَانُ بِهِمْ جَمِيْعًا، وَمَنْ كَفَرَ بِوَاحِدٍ مِنْهُمْ فَقَدْ كَفَرَ بِهِمْ جَمِيْعًا؛ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ آمَنَ بِاللهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ﴾ (البقرة: 285)

அவர்கள் (நபிமார்கள்) அனைவரையும் நாம் ஈமான் கொள்வது எங்களின் மீது கடமையாகும். அவர்களில் ஒருவரை எவராவது நிராகரித்தாலும், திட்டமாக அவர்; அவர்கள் அனைவரையும் நிராகரித்துவிட்டார் என்பதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “(மனிதர்களே! நம்முடைய) இந்தத் தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட (வேதத்)தை நம்பிக்கை கொள்கின்றார். (அவ்வாறே மற்ற) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொள்கின்றனர். இவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய

வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொள்கின்றனர். தவிர அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்லவென்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து) விடமாட்டோம்." (ஸூரதுல்-பகரா: 285)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿إِنَّ الَّذِينَ يَكْفُرُونَ بِاللَّهِ وَرُسُلِهِ وَيُرِيدُونَ أَنْ يُفَرِّقُوا بَيْنَ اللَّهِ وَرُسُلِهِ وَيَقُولُونَ نُؤْمِنُ بِبَعْضٍ وَنَكْفُرُ بِبَعْضٍ وَيُرِيدُونَ أَنْ يَتَّخِذُوا بَيْنَ ذَٰلِكَ سَبِيلًا * أُولَٰئِكَ هُمُ الْكَافِرُونَ حَقًّا ۚ وَأَعْتَدْنَا لِلْكَافِرِينَ عَذَابًا مُهِينًا﴾(1) (النساء: 150-151)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் நிராகரித்துவிட்டு, அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் இடையில் பிரிவினை செய்துவிடக் கருதி (தூதர் களில்) "சிலரை நம்பிக்கை கொள்வோம்; சிலரை நிராகரிப்போம்" எனவும் கூறி (நிராகரிப்புக்கும் நம்பிக்கைக்கும்) மத்தியில் ஒரு பாதையை ஏற்படுத்த விரும்புகின்றார்களோ," "இத்தகையவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்கள்தான். நிராகரிப்பவர்களுக்கு நாம் இழிவு தரும் வேதனையையே சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம்." (ஸூரதுன் நிஸா: 150, 151)[3]

وَفِيْ آخِرُ الْآيَةِ وَقَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَاتَّقُوا النَّارَ الَّتِيٓ أُعِدَّتْ لِلْكٰفِرِيْنَ﴾ (آل عمران:131)

உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "(நரக) நெருப்பிற்குப் பயந்து கொள்ளுங்கள். அது (இறைவனுடைய இக்கட்டளையை) நிராகரிப்பவர்களுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளது." (ஸூரது ஆல இம்ரான்:131)

وَقَوْلُهُ تَعَالَى: وَسَارِعُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ وَالْاَرْضُۙ أُعِدَّتْ لِلْمُتَّقِيْنَۙ (آل عمران: 133)

"உங்கள் இறைவனின் மன்னிப்புக்கும், சுவர்க்கத்துக்கும் விரைந்து செல்லுங்கள். அதன் விசாலம் வானங்கள், பூமியின் விசாலத்தைப் போன்றது. (அது) இறை அச்சம் உடையவர் களுக்காக(வே) தயார்படுத்தப்பட்டுள்ளது." (ஸூரது ஆல இம்ரான்:133)
இவ்வசனங்களின் இறுதியில் வருகின்ற விடயங்கள் சுவர்க்கமும் நரகமும் தற்போது இருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களாகும்.

21. فَإِذَا قِيْلَ لَكَ: جَمِيْعُ الرُّسُلِ إِلَى مَاذَا يَدْعُوْنَ النَّاسَ؟ فَقُلْ: يَدْعُوْنَهُمْ إِلَى عِبَادَةِ اللهِ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ

21. கேள்வி: அனைத்துத் தூதர்களும் மக்களை எதன் பால் அழைத்தார்கள்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அல்லாஹ்வை; அவனுக்கு எந்த ஒரு இணையையும் வைக்காமல், தனித்தவனாகிய அவனை மாத்திரம் வணங்குவதன் பால் அவர்களை அவர்கள் அழைத்தார்கள். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا أَنِ اعْبُدُوا اللهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ﴾ (النحل: 36)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படுகின்ற (அனைத்து) விடயங்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்;" (ஸூரதுன் நஹ்ல்: 36)

22. فَإِذَا قِيْلَ لَكَ: مَا تَعْرِيْفُ التَّوْحِيْدِ الَّذِيْ جَمِيْعُ الرُّسُلِ يَدْعُوْنَ إِلَيْهِ؟ فَقُلْ: هُوَ إِفْرَادُ اللهِ بِالْعِبَادَةِ

22. கேள்வி: அனைத்துத் தூதர்களும் எதன் பக்கம் அழைத்தார்களோ; அந்தத் தவ்ஹீதினுடைய வரைவிலக்கணம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَاعْبُدُوا اللهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا﴾ (النساء: 36)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "மேலும், நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள்." (ஸூரதுன் நிஸா: 36)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿قُلْ هُوَ اللهُ أَحَدٌ﴾ (الإخلاص: 1)

மேலும் உயர்ந்தவனாகிய அவனுடைய (இன்னுமொரு) கூற்று: "(நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே." (ஸூரதுல் இஹ்லாஸ்: 1)

23. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ أَقْسَامُ تَوْحِيْدِ اللهِ عَزَّ وَجَلَّ؟ فَقُلْ: ثَلَاثَةُ أَقْسَامٍ:

23. கேள்வி: கண்ணியமான; மகத்துவம் மிக்க அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவ (தவ்ஹீத்)தின் வகைகள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது மூன்று வகைப்படும்

١- تَوْحِيْدُ الرُّبُوْبِيَّةِ.

01. தவ்ஹீதுர் ருபூபிய்யா: [[படைத்தல்; பரிபாலித்தல்; ஆட்சி செய்தல்; உணவளித்தல் போன்ற விடயங்களில் அல்லாஹ்வை ஒருமைப் படுத்தல்]]

٢- تَوْحِيْدُ الْأُلُوْهِيَّةِ.

02. தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ்: [[வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தல்]]

٣- تَوْحِيْدُ الْأَسْمَاءِ وَالصِّفَاتِ.

03. தவ்ஹீதுல் அஸ்மாயி வஸ்ஸிபாத்: [[அல்லாஹ்வுடைய பெயர்கள்; பண்புகள் விடயத்தில் அவனை ஒருமைப்படுத்தல்]] என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ﴾

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்)"

وَقَوْلُهُ تَعَالَى: ﴿رَبُّ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَمَا بَيْنَهُمَا فَاعْبُدْهُ وَاصْطَبِرْ لِعِبَادَتِهِ هَلْ تَعْلَمُ لَهُ سَمِيًّا﴾ (مريم: 65) فَهَاتَانِ الْآيَتَانِ فِيْهَا أَنْوَاعُ التَّوْحِيْدِ الثَّلَاثَةُ

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "வானங்களையும், பூமியையும், இவற்றிற்கு மத்தியில் உள்ளவைகளையும் படைத்து வளர்ப்பவனும் அவனே! ஆதலால், அவன் ஒருவனையே நீங்கள் வணங்குங்கள். அவனுக்கு வழிப்படுவதில் (உங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும்) நீங்கள் சகித்துக் கொள்ளுங்கள். அவனுடைய தன்மைக்கு ஒப்பான எவரையும் நீங்கள் அறிவீர்களா?" (ஸூரத்து மர்யம்: 65)
இந்த இரண்டு வசனங்களிலும் ஏகத்துவத்தி (தவ்ஹீதி)ன் மூன்று வகைகளும் காணப்படுகின்றன.

24. فَإِذَا قِيْلَ لَكَ: مَا أَعْظَمُ حَسَنَةٍ ، وَمَا أَعْظَمُ سَيِّئَةٍ؟ فَقُلْ: أَعْظَمُ حَسَنَةٍ هُوَ تَوْحِيْدُ اللهِ عَزَّ وَجَلَّ، وَأَعْظَمُ سَيِّئَةٍ هُوَ الشِّرْكُ بِاللهِ عَزَّ وَجَلَّ

24. கேள்வி: மிக மகத்தான நன்மை என்ன?[4] மேலும் மிகப்_பயங்கரமான தீமை என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: மிக மகத்தான நன்மை அது கண்ணியமான மகத்துவமிக்க அல்லாஹ்வை ஏகத்துவப்படுத்துவதாகும். மேலும் பயங்கரமான மிகப் பெரிய தீமை அது கண்ணியமான மகத்துவமிக்க அல்லாஹ்வுக்கு இணைவைப்பதாகும். என்று நீ கூறு.

---

[4] தவ்ஹீத் (ஏகத்துவம்) – இதற்கு நன்மை என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் வருகின்றது; -அது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் பக்கம் உயர்த்தப்பட்ட ஒரு ஹதீஸாகும்.- மேலும் இது ஸஹீஹான ஹதீஸாகும். (திர்மிதி, இப்னுமாஜா)

﴿ بَلٰى مَنْ كَسَبَ سَيِّئَةً وَّاَحَاطَتْ بِهٖ خَطِيْٓـئَتُهٗ فَاُولٰٓـئِكَ اَصْحٰبُ النَّارِ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴾
ஷிர்க் (இணைவைப்பு) – தீமை என்ற பெயர் பின்வரும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்றிலே கூறப்பட்டிருக்கின்றது: "அப்படியல்ல! எவர் தீமையைச் சம்பாதித்து, அந்தக் குற்றம் அவரைச் சூழ்ந்து கொள்கிறதோ, அத்தகையோர் நரகவாசிகளே; அவர்கள் அ(ந்நரகத்)தில் என்றென்றும் இருப்பார்கள்." (ஸூரதுல் பகரா: 81)

தப்ஸீர் இப்னு ஜரீரில்; முஜாஹித், அபூ வாயில் இவர்கள் அல்லாத பலரும் கூறுகின்றனர்: "இந்த வசனத்தில் தீமை என்று கூறப்பட்டிருப்பது ஷிர்க் (இணைவைப்பு) ஆகும்."

இதுபோன்ற வசனங்களை ஆதாரமாகக் கொண்டு முஸ்லிம்களில் இருக்கும் பாவிகளை காபிர் (நிராகரிப்பாளர்)கள் என்று கூறும் வழிகெட்ட ஹவாரிஜ்களுடைய மடமைக்கு இதிலே (இந்த ஸலபுகளின் விளக்கத்திலே) தெளிவு இருக்கின்றது.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّ اللهَ لاَ يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ﴾ (النساء: 48)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான்; இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்;" (ஸூரதுன் நிஸா: 48)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿فَمَا لَنَا مِنْ شَافِعِيْنَ * وَلَا صَدِيْقٍ حَمِيْمٍ * فَلَوْ أَنَّ لَنَا كَرَّةً فَنَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ﴾ (الشعراء: 100 -102)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "ஆகவே, எங்களுக்காகப் பரிந்து பேசுவோர் (இன்று) எவருமில்லை. அனுதாபமுள்ள உற்ற நண்பனும் இல்லை. நாங்கள் (உலகத்துக்கு) மீண்டு செல்ல வழி கிடைக்குமாயின், நிச்சயமாக நாங்கள் முஃமின்களாகி விடுவோமே! (என்று கூறுவார்கள்.)" (ஸூரதுஷ்ஷுஅரா: 100-102)

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ –رَضِيَ اللهُ عَنْهُ– قَالَ: قَالَ رَسُولُ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ–: ((شَفَاعَتِي لِأَهْلِ الْكَبَائِرِ مِنْ أُمَّتِيْ)) أَخْرَجَهُ أَحْمَدُ، وَهُوَ حَدِيْثٌ صَحِيْحٌ

அனஸ் இப்னு மாலிக் றழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் வரும் அறிவிப்பில்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[என்னுடைய உம்மத்திலிருந்து பெரும் பாவங்களைச் செய்தவர்களுக்கு என்னுடைய (ஷபாஅஹ்) பரிந்துரை இருக்கின்றது]] (அஹ்மத்) மேலும் இது ஸஹீஹான ஒரு ஹதீஸாகும்.

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் (ஷபாஅஹ்) சிபாரிசின் மூலமாக முஸ்லிம்களில் இருக்கும் பெரும் பாவங்கள் செய்தவர்கள் மிகச் சந்தோசப்படுபவர்களாக இருப்பார்கள். மேலும் இணைவைப்பவனுக்கு எந்தவிதப் பரிந்துரையுமில்லை. என்பதையும் இந்த ஹதீஸ் அறிவிக்கின்றது.

وَعَنْ جَابِرِ بْنِ عَبْدِاللهِ –رَضِيَ اللهُ عَنْهُما– قالَ: قَالَ رَسُوْلُ اللهِ – صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ–: ((مَنْ مَاتَ لَا يُشْرِكُ بِاللهِ شَيْئًا دَخَلَ الْجَنَّةَ وَمَنْ مَاتَ يُشْرِكُ بِاللهِ شَيْئًا دَخَلَ النَّارَ)) أَخْرَجَهُ مُسْلِمٌ

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் றழியல்லாஹு அன்ஹுமா அவர்களைத் தொட்டும் வரும் அறிவிப்பில்; நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[எவர் அல்லாஹ்வுக்கு எந்த ஒன்றை கொண்டும் இணைவைக்காமல் மரணிக்கின்றாரோ அவர் சுவனம் நுழைவார். எவர் அல்லாஹ்வுக்கு ஏதாவது ஒன்றைக் கொண்டு இணைவைத்த நிலையில் மரணிக்கின்றாரோ அவர் நரகம் நுழைவார்.]] (முஸ்லிம்)

25. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ مَرَاتِبُ الدِّيْنِ؟ فَقُلْ: مَرَاتِبُ الدِّيْنِ ثَلَاثَةٌ: اَلْإِسْلَامُ، وَالْإِيْمَانُ، وَالْإِحْسَانُ

25. கேள்வி: மார்க்கத்தின் படித்தரங்கள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: மூன்று ஆகும். 01- அல்-இஸ்லாம், 02- அல்-ஈமான், 03- அல்-இஹ்ஸான். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ عُمَرَ بْنِ الْخَطَّابِ –رَضِيَ اللهُ عَنْهُ– فِي صَحِيْحِ مُسْلِمٍ رَقَم(8)، وَفِيْهِ أَنَّ جِبْرِيْلَ عَلَيهِ السَّلَامُ سَأَلَ رَسُوْلَ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– عَنِ الْإِسْلَامِ، ثُمَّ عَنِ الْإِيْمَانِ، ثُمَّ عَنِ الْإِحْسَانِ.

அதற்கான ஆதாரம்: உமர் இப்னுல் ஹத்தாப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; இது ஸஹீஹ் முஸ்லிமில் 08வது இலக்கத்தின் கீழ் வரும் ஹதீஸாகும். மேலும் அதிலே இடம்பெறுவதாவது; நிச்சயமாக ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், இஸ்லாத்தைப் பற்றியும்; பிறகு ஈமானைப் பற்றியும்; பிறகு இஹ்ஸானைப் பற்றியும் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களிடம் வினவினார்கள்.

26. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ أَرْكَانُ الْإِسْلَامِ؟ فَقُلْ: خَمْسَةُ أَرْكَانٍ

26. கேள்வி: இஸ்லாத்தின் தூண்கள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அவை ஐந்து தூண்களாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ عَبْدِاللهِ بْنِ عُمَرَ–رَضِيَ اللهُ عَنْهُمَا– أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ: شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ، وَإِقَامِ الصَّلَاةِ، وَإِيْتَاءِ الزَّكَاةِ، وَالْحَجِّ، وَصَوْمِ رَمَضَانَ)). مُتَّفَقٌ عَلَيْهِ

அதற்கான ஆதாரம்: அப்துல்லாஹ் இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[இஸ்லாம் ஐந்து (தூண்கள்)மீது நிறுவப்பட்டுள்ளது. (அவை:) அல்லாஹ்வைத் தவிர உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் வேறு எவருமில்லை. என்றும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுதல்; தொழுகையைக் கடைப்பிடிப்பது; ஸகாத் வழங்குவது; இறையில்லம் கஃபாவில் ஹஜ் செய்வது; ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது.]] (புஹாரி, முஸ்லிம்)

27. فَإِذَا قِيْلَ لَكَ: مَا هُوَ الْإِيْمَانُ؟ فَقُلْ: هُوَ نُطْقٌ بِاللِّسَانِ، وَاعْتِقَادٌ بِالْقَلْبِ، وَعَمَلٌ بِالْجَوَارِحِ، وَهُوَ يَزِيْدُ بِالطَّاعَةِ، وَيَنْقُصُ بِالمَعْصِيَةِ

27. கேள்வி: ஈமான் (நம்பிக்கை) என்றால் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது நாவினால் மொழிவதும்; உள்ளத்தால் உறுதி கொள்வதும்; உடல் உருப்புக்களால் அமல் செய்வதும்; மேலும் வழிபடுவதன் மூலமாக அது அதிகரிக்கின்றது. மாறு செய்வதன் மூலமாக அது குறைகின்றது. என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ عَلَى أَنَّهُ نُطْقٌ بِاللِّسَانِ، وَعَمَلٌ بِالْجَوَارِحِ حَدِيْثُ أَبِي هُرَيْرَةَ –رَضِيَ اللهُ عَنْهُ– أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ:

((اَلْإِيْمَانُ بِضْعٌ وَسَبْعُوْنَ أَوْ بِضْعٌ وَسِتُّوْنَ شُعْبَةً، فَأَفْضَلُهَا: قَوْلُ: لَا إِلَهَ إِلَّا اللهُ، وَأَدْنَاهَا: إِمَاطَةُ الْأَذَى عَنِ الطَّرِيْقِ، وَالْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الْإِيْمَانِ)). مُتَّفَقٌ عَلَيْهِ

மேலும் ஈமான் என்பது நாவினால் மொழிதல், உடல் உருப்புக்களால் அமல் செய்தல் என்பதற்கான ஆதாரம்: அபூஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[ஈமான் (இறைநம்பிக்கை) என்பது "எழுபதுக்கும் அதிகமான" அல்லது "அறுபதுக்கும் அதிகமான" கிளைகள் கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது "அல்லாஹ்வைத் தவிர உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் வேறு எவருமில்லை." என்று கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது, தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். நாணமும் இறைநம்பிக்கையின் ஒரு கிளைதான்]] (புஹாரி, முஸ்லிம்)

وَالدَّلِيْلُ أَنَّهُ اِعْتِقَادٌ بِالْقَلْبِ حَدِيْثُ عُمَرَ الَّذِيْ تَقَدَّمَ فِي أَرْكَانِ الْإِيْمَانِ

அது உள்ளத்தால் உறுதி கொள்ளல் என்பதற்கான ஆதாரம்: ஈமானின் தூண்கள் விடயத்தில் சென்ற உமர் இப்னுல் ஹத்தாப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்.

وَقَوْلُ اللهِ تَعَالَى:﴿وَعَلَى اللَّهِ فَتَوَكَّلُوا إِنْ كُنْتُمْ مُؤْمِنِينَ﴾ (المائدة: 23)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "நீங்கள் (உண்மை) நம்பிக்கையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வையுங்கள்" (ஸூரதுல் மாயிதா: 23)

وَعَنْ أَنَسِ بْنِ مَالِكٍ –رَضِيَ اللهُ عَنْهُ– عَنِ النَّبِيِّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((آيَةُ الْإِيْمَانِ حُبُّ الْأَنْصَارِ، وَآيَةُ النِّفَاقِ بُغْضُ الْأَنْصَارِ)) مُتَّفَقٌ عَلَيْهِ

மேலும் அனஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் வருவதாவது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

[[ஈமான் எனும் இறைநம்பிக்கையின் அடையாளம் அன்சாரிகளை நேசிப்பதாகும். நயவஞ்சகத்தின் அடையாளம் அன்சாரிகளை வெறுப்பதாகும்]] (புஹாரி, முஸ்லிம்)

وَالدَّلِيْلُ عَلَى أَنَّهُ يَزِيْدُ بِالطَّاعَةِ... قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ إِذَا ذُكِرَ اللهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ عَلَيْهِمْ آيَاتُهُ زَادَتْهُمْ إِيْمَانًا وَعَلَى رَبِّهِمْ يَتَوَكَّلُونَ﴾ (الأنفال: 2)

மேலும் ஈமான் என்பது வழிபடுவதன் மூலமாக அதிகரிக்கின்றது என்பதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “உண்மையான நம்பிக்கையாளர்கள் யாரென்றால், அல்லாஹ்வை (அவர்கள் முன்) நினைவு கூறப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும்; அல்லாஹ்வுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப் பட்டால் அவர்களுடைய நம்பிக்கை (மென்மேலும்) அதிகரிக்கும். அவர்கள் தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பார்கள்.” (ஸூரதுல் அன்பால்: 2)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿هُوَ الَّذِي أَنْزَلَ السَّكِينَةَ فِي قُلُوْبِ الْمُؤْمِنِيْنَ لِيَزْدَادُوا إِيمَانًا مَعَ إِيمَانِهِمْ﴾ (الفتح: 4)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: [[நம்பிக்கை கொண்டவர்களுடைய உள்ளங்களில் அவன்தான் மன நிம்மதியை அளித்து, அவர்களுடைய நம்பிக்கை மென்மேலும் அதிகரிக்கும்படி செய்தான்.]] (ஸூரதுல் பத்ஹ்: 4)

وَقَوْلُهُ: ﴿وَيَزْدَادَ الَّذِينَ آمَنُوا إِيمَانًا﴾ (المدثر: 31) وَالدَّلِيْلُ عَلَى أَنَّهُ يَنْقُصُ بِالْمَعْصِيَةِ أَدِلَّةُ زِيَادَتِهِ، فَإِنَّهُ قَبْلَ أَنْ يَزِيْدَ كَانَ نَاقِصًا.

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: “நம்பிக்கை கொண்டவர்களின் நம்பிக்கையை இது அதிகப்படுத்தும்.” (ஸூரதுல் முத்தஸ்ஸிர்: 31)

அது (ஈமான்) அதிகரிக்கின்றது என்பதற்கான ஆதாரங்களே மாறு செய்வதன் மூலம் அது குறைகின்றது என்பதற்கான ஆதாரமாகும். ஏனெனில் அது அதிகரிப்பதற்கு முன்னர் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது.

قَالَ الْإِمَامُ الْبُخَارِيُّ فِي (كِتَابِ الْإِيْمَانِ) مِنْ «صَحِيْحِهِ» بَابِ (33): فَإِذَا تَرَكَ شَيْئًا مِنَ الْكَمَالِ فَهُوَ نَاقِصٌ (صَحِيْحُ الْبُخَارِيُّ) وَحَدِيْثُ شُعَبِ الْإِيْمَانِ الَّذِي ذَكَرْنَاهُ قَرِيْبًا،

இமாம் புஹாரி ரஹிமஹுல்லாஹ் அவருடைய ஸஹீஹுல் புஹாரி என்ற நூலில்; ஈமானுடைய பாடத்திலே 33வது தலைப்பிலே கூறுகின்றார்: பூரணமான ஒன்றில் ஏதாவது ஒன்றை அவர் விட்டுவிட்டால் அது குறைவானதாக இருக்கும்.
மேலும் சற்று முன்னர் ஈமானின் கிளைகள் விடயத்தில் நாங்கள் ஒரு ஹதீஸைக் கூறினோம். அதுவும் இதற்கான ஆதாரமாகும்.

وَحَدِيْثُ أَبِي سَعِيْدٍ الْخُدْرِيِّ –رَضِيَ اللهُ عَنْهُ– أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: ((مَنْ رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وَذَلِكَ أَضْعَفُ الْإِيْمَانِ)). (أَخْرَجَهُ مُسْلِمٌ) وَفِيْهِ أَنَّ إِنْكَارَ الْمُنْكَرِ مِنَ الْإِيْمَانِ.

மேலும் அபூ ஸயீத் அல்-குத்ரீ றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[உங்களில் ஒருவர் ஒரு தீமையை (மார்க்கத்திற்கு முரணான ஒரு செயலை)க் கண்டால் அவர் அதைத் தமது கரத்தால் மாற்றியமைக்கட்டும்,முடியாவிட்டால் தமது நாவால் அதை மாற்றியமைக்கட்டும், அதுவும் முடியாவிட்டால் தமது உள்ளத்தால் அதை வெறுத்து ஒதுங்கட்டும். இந்த (இறுதி) நிலையானது இறைநம்பிக்கை (ஈமானின்) யின் மிகப் பலகீனமா(ன நிலையா)கும்.]] (முஸ்லிம்).
நிச்சயமாக ஒரு தீமையை (வெறுக்கத்தக்க ஒரு விடயத்தை) தடுப்பது ஈமானில் நின்றும் உள்ளது என்பது அதிலே காணப்படுகின்றது.

28. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ أَرْكَانُ الْإِيْمَانِ؟ فَقُلْ: سِتَّةُ أَرْكَانٍ

28. கேள்வி: ஈமானின் தூண்கள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அவை ஆறு ஆகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ عُمَرَ بْنِ الْخَطَّابِ فِي «صَحِيْحِ مُسْلِمٍ» أَنَّ النَّبِيَّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– سَأَلَهُ جِبْرِيْلُ عَلَيهِ السَّلَام عَنِ الْإِيْمَانِ فَقَالَ: ((أَنْ تُؤْمِنَ بِاللهِ، وَمَلَائِكَتِهِ، وَكُتُبِهِ، وَرُسُلِهِ، وَالْيَوْمِ الْآخِرِ، وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ))، قَالَ: صَدَقْتَ. وَهُوَ مُتَّفَقٌ عَلَيْهِ مِنْ حَدِيْثِ أَبِي هُرَيْرَةَ

அதற்கான ஆதாரம்: உமர் இப்னு ஹத்தாப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களிடம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஈமானைப் பற்றி வினவினார்கள்; எனவே அவர்கள் கூறினார்கள் “ஈமான் என்பது அல்லாஹ்வையும்; அவனுடைய மலக்குகளை (வானவர்களை)யும்; அவனுடைய வேதங்களையும்; அவனுடைய தூதர்களையும்; இறுதி நாளையும் ஈமான் கொள்வதாகும்.“ எனக் கூறினார்கள். மேலும் கத்ர் (விதி) அதனுடைய நல்லதையும் இன்னும் கெட்டதையும் நீ ஈமான் கொள்வதாகும். அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்: நீ உண்மையைச் சொல்லிவிட்டாய் என்று கூறினார்கள். இது புஹாரி, முஸ்லிமில் அபூ ஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகப் பதிவாகியுள்ளது

29. فَإِذَا قِيْلَ لَكَ: مَا تَعْرِيْفُ الْإِحْسَانِ بَيْنَ الْعَبْدِ وَرَبِّهِ؟ فَقُلْ: هُوَ ((أَنْ تَعْبُدَ اللهَ كَأَنَّكَ تَرَاهُ، فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ))

29. கேள்வி: அடியார்களுக்கும் அவனது இரட்சகனுக்கும் மத்தியில் உள்ள “இஹ்ஸான்” என்பதன் வரைவிலக்கணம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: இஹ்ஸான் என்பது அல்லாஹ்வை நீ பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று வணங்குவதாகும்; நீ அவனைப் பார்க்காவிட்டாலும், அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். என்று நீ கூறு. இது உமர் இப்னுல் ஹத்தாப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; முஸ்லிம் எனும் கிரந்தத்தில் இலக்கம்: 08வது ஹதீஸாக பதிவாகியுள்ளது

.

30. فَإِذَا قِيْلَ لَكَ: مَا حُكْمُ سَبِّ اللهِ، وَسَبِّ رَسُوْلِهِ، وَسَبِّ دِيْنِهِ، أَوِ الْإِسْتِهْزَاءِ بِذَلِكَ؟ فَقُلْ: هَذَا كُفْرٌ أَكْبَرُ، مَنْ تَعَمَّدَهُ خَرَجَ مِنْ مِلَّةِ الْإِسْلَامِ

30. கேள்வி: அல்லாஹ்வை; அவனது தூதரை; அவனது மார்க்கத்தைத் திட்டுவது அல்லது அவைகளைப் பரிகாசம் செய்வது போன்றவற்றின் சட்டம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: இது ஒரு மிகப் பெரிய குப்ர் (இறை நிராகரிப்பு) ஆகும். எவர் இதனை (அறிந்து) வேண்டுமென்றே செய்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் வெளியேறிவிடுவார்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿قُلْ أَبِاللهِ وَآيَاتِهِ وَرَسُولِهِ كُنْتُمْ تَسْتَهْزِئُونَ * لا تَعْتَذِرُوا قَدْ كَفَرْتُمْ بَعْدَ إِيمَانِكُمْ﴾ (التوبة: 65-66)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: (நபியே! அவர்களை நோக்கி) "அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனது தூதரையுமா நீங்கள் பரிகசிக்கின்றீர்கள்?" என்று நீங்கள் கேளுங்கள். நீங்கள் (செய்யும் விஷமத்தனமான பரிகாசத்திற்கு) வீண் புகல் கூற வேண்டாம். நீங்கள் நம்பிக்கை கொண்டதற்குப் பின்னர் நிச்சயமாக (அதனை) நிராகரித்துவிட்டீர்கள்." (ஸூரதுத் தவ்பா: 65, 66)[5]

[5] எங்களுடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களைத் திட்டுவது; அல்லது அவரல்லாத நபிமார்களை மேலும் தூதர்களைத் திட்டுவது; அல்லது வானவர்களில் நின்றும் ஒரு வானவரையேனும் திடுவது அல்லது அவர்களுடன் விரோதம் கொள்வது; அல்லது அவர்களில் ஒருவருடன் விரோதம் கொள்வது போன்றவற்றிற்கு மத்தியில் உள்ள சட்டம் விடயத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿اَللّٰهُ يَصۡطَفِىۡ مِنَ الۡمَلٰٓـئِكَةِ رُسُلًا وَّمِنَ النَّاسِ﴾ (الحج: 75)

மேலும் இதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: மலக்குகளிலிருந்தும் மனிதர்களிலிருந்தும் அல்லாஹ் (தன்னுடைய) தூதர்களைத் தெரிவு செய்து கொள்கிறான்.(ஸூரதுல் ஹஜ்:75)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿لَا نُفَرِّقُ بَيۡنَ اَحَدٍ مِّنۡ رُّسُلِهٖ﴾ (البقرة: 285)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய இன்னுமொரு கூற்று: அவனுடைய தூதர்களில் எவரையும் (தூதர் அல்லவென்று) நாங்கள் பிரித்து (நிராகரித்து) விடமாட்டோம். (ஸூரதுல்-பகரா: 285)

31. فَإِذَا قِيْلَ لَكَ: مَا جَزَاءُ الْمُؤْمِنِيْنَ، وَمَا جَزَاءُ الْكَافِرِيْنَ يَوْمَ الْقِيَامَةِ؟ فَقُلْ: جَزَاءُ الْمُؤْمِنِيْنَ الْجَنَّةُ فِي أَعْلَى عِلِّيِّيْنَ

31. கேள்வி: மறுமை நாளில் முஃமின் (இறை விசுவாசி)களின் கூலி என்ன? மேலும் காபிர் (இறை நிராகரிப்பாளர்)களின் கூலி என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: முஃமின்களின் கூலியானது உயர்ந்த இடங்களில் இருக்கக் கூடிய உயர்ஸ்த்தானத்தில் உள்ள சுவனமாகும்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ أُولَٰئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ * جَزَاؤُهُمْ عِنْدَ رَبِّهِمْ جَنَّاتُ عَدْنٍ تَجْرِي مِنْ تَحْتِهَا

وَقَوْلُهُ تَعَالَى: ﴿قُوْلُوْٓا اٰمَنَّا بِاللهِ وَمَآ أُنْزِلَ اِلَيْنَا وَمَآ أُنْزِلَ اِلٰٓى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَ الْاَسْبَاطِ وَمَآ أُوْتِيَ مُوْسٰى وَعِيْسٰى وَمَآ أُوْتِيَ النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ﴾ (البقرة: 136)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய இன்னுமொரு கூற்று: (நம்பிக்கையாளர்களே!) நீங்களும் கூறுங்கள்: "அல்லாஹ்வையும் எங்களுக்கு அருளப்பட்ட (இவ்வேதத்)தையும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் ஆகியவர்களுக்கும், இவர்களுடைய சந்ததிகளுக்கும் அருளப்பட்ட அனைத்தையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டிருந்ததையும், மற்றைய நபிமார்களுக்கு இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டிருந்தவற்றையும் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். அவர்களிலிருந்து எவரையும் (நபியல்ல என்று) நாம் பிரித்துவிட மாட்டோம். அன்றி அவனுக்கே நாங்கள் முற்றிலும் வழிப்படுவோம்." (ஸூரதுல்-பகரா: 136)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿مَنْ كَانَ عَدُوًّا لِّلّٰهِ وَمَلٰٓئِكَتِهٖ وَ رُسُلِهٖ وَجِبْرِيْلَ وَمِيْكٰلَ فَاِنَّ اللهَ عَدُوٌّ لِّلْكٰفِرِيْنَ﴾ (البقرة: 98)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய இன்னுமொரு கூற்று: (உங்களில்) எவரேனும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய மலக்குகளுக்கும், அவனுடைய தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயீலுக்கும் எதிரியாகி (அவர்களை நிராகரித்து) விட்டால் (அந்)நிராகரிப்பவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வும் எதிரியாகவே இருப்பான். (ஸூரதுல்-பகரா: 98)

الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا ۖ رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ ۚ ذَٰلِكَ لِمَنْ خَشِيَ رَبَّهُ﴾ (البينة: 8,7)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “ஆயினும், (இந்த நபியின் வரவை எதிர்பார்த்திருந்தவர்களில்) எவர்கள் (அவரை) நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றார்களோ அவர்களே, நிச்சயமாக படைப்புகளில் மிகச் சிறந்தவர்கள். அவர்களுடைய கூலி அவர்களின் இறைவனிடத்தில் உள்ள "அத்ன்" என்னும் நிலையான சுவனபதியாகும். அதில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கும். என்றென்றுமே அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள். அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி திருப்தியடைவான். அவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தி அடைவார்கள். எவர் தன் இறைவனுக்குப் பயப்படுகின்றாரோ, அவருக்குத்தான் இத்தகைய பாக்கியம் கிடைக்கும். (ஸூரதுல்-பையினா: 7, 8)

وَجَزَاءُ الْكَافِرِيْنَ النَّارُ فِي أَسْفَلِ سَافِلِيْنَ

மேலும் காபிர்களின் கூலியானது, தாழ்ந்த இடங்களிலுள்ள மிகத் தாழ்ந்தஸ்தானத்தில் இருக்கக் கூடிய நரகமாகும்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَالَّذِينَ كَفَرُوا لَهُمْ نَارُ جَهَنَّمَ لا يُقْضَى عَلَيْهِمْ فَيَمُوتُوا وَلا يُخَفَّفُ عَنْهُمْ مِنْ عَذَابِهَا كَذَلِكَ نَجْزِي كُلَّ كَفُورٍ﴾ (فاطر: 36)

மேலும் அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: எவர்கள் (நம்முடைய வசனங்களை) நிராகரித்து விடுகிறார்களோ அவர்களுக்கு நரக நெருப்புத்தான் (கூலியாகக்) கிடைக்கும். அவர்கள் இறந்துபோகும் விதத்தில் அதில் அவர்களுடைய காரியம் முடிவு செய்யப்பட மாட்டாது. (வேதனையை அனுபவித்துக் கொண்டிருப்பதற்காக உயிருடனேயே இருப்பார்கள்.) அன்றி, அவர்களுடைய வேதனையில் ஒரு சிறிதும் குறைக்கப்பட மாட்டாது. இவ்வாறே நிராகரிப்பவர்கள் எல்லோருக்கும் நாம் கூலி கொடுப்போம்.

وَالدَّلِيْلُ أَنَّ الْجَنَّةَ فِي أَعْلَى عِلِّيِّيْنَ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَلَقَدْ رَآهُ نَزْلَةً أُخْرَى * عِنْدَ سِدْرَةِ الْمُنْتَهَى * عِنْدَهَا جَنَّةُ الْمَأْوَى﴾ (النجم: 13-15)

மேலும் நிச்சயமாக சுவனமானது உயர்ந்த இடங்களில் உயர்ஸ்தானத்தில் இருக்கின்றது என்பதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: நிச்சயமாக அவர், மற்றொரு முறையும் (தன்னிடத்தில் ஜிப்ரயீலாகிய) அவர் இறங்கக்

கண்டிருக்கின்றார். "ஸித்ரத்துல் முன்தஹா" என்னும் (இலந்தை) மரத்தின் சமீபத்தில். அதன் சமீபத்தில்தான் (நல்லடியார்கள்) தங்கும் சுவனபதி இருக்கின்றது. (ஸூரதுந் நஜ்ம்: 13-15)

وَالدَّلِيْلُ أَنَّ النَّارَ فِي أَسْفَلِ سَافِلِيْنَ حَدِيْثُ الْبَرَاءِ أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ فِيمَا يَرْوِي عَنْ رَبِّهِ عَزَّوَجَلَّ: ((أُكْتُبُوْا كِتَابَ عَبْدِيْ فِي سِجِّيْنٍ، فِي الْأَرْضِ السُّفْلَى)) أَخْرَجَهُ أَحْمَدُ فِي "المُسْنَدِ" وَهُوَ حَدِيْثٌ صَحِيْحٌ.

மேலும் நிச்சயமாக நரகமானது, தாழ்ந்த இடங்களில் மிகத் தாழ்ந்த ஸ்தானத்தில் இருக்கின்றது. என்பதற்கான ஆதாரம்: அல்பரா ؓ றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கண்ணியமிக்க; மகத்துவம் பெற்ற அவருடைய இரட்சகனிடமிருந்து அறிவிக்கையில் கூறினார்கள்: [[என்னுடைய இந்த அடியானுடைய ஏட்டை மிகத் தாழ்ந்த பூமியிலே இருக்கக்கூடிய சிஜ்ஜீனிலே பதிவு செய்யுங்கள். (என்று கூறுவான்).]] இதை இமாம் அஹ்மத் முஸ்னத் எனும் கிரந்தத்திலே அறிவிக்கின்றார்கள். இது ஒரு ஸஹீஹான ஹதீஸாகும்.

மேலும் ஆதாரம் எவருக்கு சாட்சி சொன்னதோ அவருக்கு அன்றி வேறு எவருக்கும் நாம் சுவனத்தைக் கொண்டோ; அல்லது நரகத்தைக் கொண்டோ சாட்சி சொல்லமாட்டோம்.

وَلَا نَشْهَدُ بِالْجَنَّةِ أَوِ النَّارِ إِلَّا لِمَنْ شَهِدَ لَهُ الدَّلِيْلُ لِقَوْلِ اللهِ تَعَالَى: ﴿وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ﴾ (الإسراء: 36)

உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: (நபியே!) நீங்கள் அறியாத யாதொரு விஷயத்தையும் நீங்கள் பின்தொடராதீர்கள்! (ஸூரது இஸ்ரா: 36)

32. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ عَدَدُ الدُّوْرِ؟ فَقُلْ: ثَلَاثَةٌ.

32. கேள்வி: (மனித வாழ்க்கையின்) வீடுகள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: மூன்று ஆகும்.

١ـ دَارُ الدُّنْيَا الْفَانِيَةُ

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَمَا الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا مَتَاعُ الْغُرُورِ﴾ (آل عمران: 185)

01 – அழிந்துவிடக்கூடிய இந்த உலக வீடு.

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “இவ்வுலக வாழ்க்கை மயக்கக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை.” (ஸூரதுல் ஆல-இம்ரான்: 185)

٢ـ دَارُ الْبَرْزَخِ

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَمِنْ وَرَائِهِمْ بَرْزَخٌ إِلَى يَوْمِ يُبْعَثُونَ﴾ (المؤمنون: 100)

02 – திரைமறைவான (கப்ர்) வீடு

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: அவர்களுக்கு முன் ஓர் அரண் ஏற்பட்டு விடும். (உயிர் கொடுத்து) எழுப்பப்படும் நாள் வரையில் அதில் தங்கிவிடுவார்கள். (ஸூரதுல் முஃமினூன்: 100)

٣ـ دَارُ الْقَرَارِ

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى مُخْبِرًا عَنْ مُؤْمِنِ آلِ فِرْعَوْنَ: ﴿يَا قَوْمِ إِنَّمَا هَذِهِ الْحَيَاةُ الدُّنْيَا مَتَاعٌ وَإِنَّ الْآخِرَةَ هِيَ دَارُ الْقَرَارِ﴾ (غافر: 39)

03 – நிரந்தரமான (மறுமை) வீடு:

அதற்கான ஆதாரம்: பிர்அவ்னின் குடும்பத்தில் இருந்த முஃமினைப் பற்றி “என்னுடைய சமுகத்தாரே! இவ்வுலக வாழ்க்கை எல்லாம் அற்ப சுகம்தான்; அன்றியும் நிச்சயமாக; மறுமையோ அதுதான் (என்றென்றும் இருக்கும்) நிலையான வீடு. உயர்ந்தவனாகிய அல்லாஹ் அவனுடைய கூற்றிலே இவ்வாறு விவரிக்கின்றான்.” (ஸூரது காபிர்: 39) என்று நீ கூறு.

33. فَإِذَا قِيْلَ لَكَ: مَا أَوَّلُ مَنَازِلِ الْآخِرَةِ؟ فَقُلْ: أَوَّلُ مَنَازِلِ الآخِرَةِ اَلْقَبْرُ

33. கேள்வி: மறுமையின் நிலைகளில் முதலாவது நிலை என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: மறுமையின் நிலைகளில் முதலாவது நிலை கப்ர் ஆகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ عُثْمَانَ بْنِ عَفَّانَ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قالَ: ((إِنَّ الْقَبْرَ أَوَّلُ مَنَازِلَ الآخِرَةِ، فَإِنْ نَجَا مِنْهُ فَمَا بَعْدَهُ أَيْسَرُ مِنْهُ، وَإِنْ لَمْ يَنْجُ مِنْهُ فَمَا بَعْدَهُ أَشَدُّ مِنْهُ)) أَخْرَجَهُ التِّرْمِذِيُّ، وابْنُ مَاجَه، وأَحْمَدُ، وَهُوَ حَدِيْثٌ حَسَنٌ

அதற்கான ஆதாரம்: உஸ்மான் இப்னு அப்பான் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸாகும்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நிச்சயமாக மறுமையின் நிலைகளில் முதலாவது (நிலை) கப்ர் ஆகும். அதிலிருந்து ஈடேற்றம் பெற்றுவிட்டால், அதற்குப் பின்னால் இருப்பது அதைவிட மிக இலகுவானதாக இருக்கும். அதிலிருந்து ஈடேற்றம் பெறாவிட்டால், அதற்குப் பின்னால் உள்ளது அதைவிட மிகக் கடினமாக இருக்கும்.]] இதை இமாம் திர்மிதி; இப்னு மாஜாஹ்; அஹ்மத் போன்றோர் அறிவிக்கின்றனர். மேலும் இது ஒரு ஹஸனான ஹதீஸாகும்.

34. فَإِذَا قِيْلَ لَكَ: مَاذَا تَعْتَقِدُ فِي عَذَابِ الْقَبْرِ وَنَعِيْمِهِ؟ فَقُلْ: أَعْتَقِدُ أَنَّهُ حَقٌّ لِمَنْ كَانَ لَهُ أَهْلًا

34. கேள்வி: கப்ர் உடைய வேதனை மற்றும் அதன் இன்பம் விடயத்தில் நீ எதனை நம்பிக்கையாகக் கொள்கின்றாய்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அதற்கு எவர் உரித்தானவராக இருக்கின்றாரோ அவருக்கு அது உண்மை (நடந்தே) ஆகும். என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ عَائِشَةَ -رَضِيَ اللهُ عَنْهَا- أَنَّهَا سَأَلَتْ رَسُوْلَ اللهِ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- عَنْ عَذَابِ الْقَبْرِ فَقَالَ: ((عَذَابُ الْقَبْرِ حَقٌّ)) مُتَّفَقٌ عَلَيْهِ، وهَذَا لَفْظُ البُخَارِيِّ

அதற்கான ஆதாரம்: ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ்; நிச்சயமாக அவர் அல்லாஹ்வின் தூதரிடத்தில் கப்ர் உடைய வேதனையைப் பற்றி வினவினார். அதற்கு அவர்: [[கப்ர் உடைய வேதனை உண்மையாகும்.]] என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்) இன்னும் இது இமாம் புஹாரியுடைய வாசகமாகும்.

وَعَنْهَا (أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- كَانَ يَتَعَوَّذُ مِنْ فِتْنَةِ الْقَبْرِ وَعَذَابِ الْقَبْرِ، وَمِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ) (مُتَّفَقٌ عَلَيْهِ) وَفِيْهِ إِثْبَاتُ عَذَابِ الْقَبْرِ، وَفِتْنَةِ الْقَبْرِ، وَفِتْنَةِ الَّدجَّالِ الْأَكْبَرِ.

மேலும் அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் [[கப்ர் உடைய சோதனை, கப்ர் உடைய வேதனை; அல்-மஸீஹ் தஜ்ஜாலின் சோதனை இவைகளைவிட்டும் பாதுகாவல் தேடினார்கள்]]. (புஹாரி, முஸ்லிம்) மேலும் இதிலே கப்ர் உடைய வேதனை; கப்ர் உடைய சோதனை; மிகப் பெரிய தஜ்ஜாலுடைய சோதனை அனைத்தும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

وَمِنَ الْأَدِلَّةِ عَلَى نَعِيْمِهِ حَدِيْث الْبَرَاءِ، وَفِيْهِ: ((وَأَمَّا الْمُؤْمِنُ فَيُقَالُ: أَلْبِسُوْهُ مِنَ الْجَنَّةِ، وَافْتَحُوْا لَهُ بَابًا إِلَى الْجَنَّةِ فَيَأْتِيْهِ مِنْ طِيْبِهَا وَرَوْحِهَا، ويُفْسَحُ لَه فِي قَبْرِهِ مَدَّ بَصَرِهِ)). أَخْرَجَهُ أَحْمَدُ فِي "المُسْنَدِ" وهُوَ حَدِيْثٌ صَحِيْحٌ.

மேலும் அதன் இன்பத்திற்கான ஆதாரங்களிலிருந்தும் உள்ளதுதான்; அல்-பராஃ றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்: அதில் வருவதாவது; [[ஒரு முஃமினைப் பொருத்தமட்டில் அவனுக்கு சுவனத்திலிருந்து ஆடை அணிவியுங்கள் என்றும்; சுவனத்திற்கான கதவை அவனுக்குத் திறந்து கொடுங்கள் என்றும் சொல்லப்படும். எனவே அவனுக்கு அதன் நறுமணமும், அதன் சுகண்டியும் வந்து கொண்டிருக்கும். மேலும் அவனுடைய கப்ர் அவனுடைய பார்வைக்கு எட்டும் தூரம் வரை விசாலமாக்கப்படும்.]] இதை இமாம் அஹ்மத் அல்-முஸ்னத் என்ற நூலில் அறிவிக்கின்றார். மேலும் இது ஸஹீஹான ஒரு ஹதீஸாகும்.

35. فَإِذَا قِيْلَ لَكَ: مَاذَا تَعْتَقِدُ فِيْ الْبَعْثِ وَالوُقُوفِ وَالْحِسَابِ وَأَخْذِ الْكِتَابِ؟ فَقُلْ: أَعْتَقِدُ أَنَّهُ حَقٌّ

35. கேள்வி: (மரணத்தின் பின்) திருப்பி எழுப்பப்படுதல்; (மஹ்ஷர் வெளியில்) நிற்றல்; கேள்வி கணக்கு; (நன்மை, தீமை) ஏட்டைப் பெற்றுக் கொள்ளல்; போன்ற விடயங்களில் நீ எதனை நம்பிக்கை கொள்கின்றாய்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது உண்மையானது என்று நம்பிக்கை கொள்கின்றேன். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿زَعَمَ الَّذِينَ كَفَرُوا أَنْ لَنْ يُبْعَثُوا قُلْ بَلَى وَرَبِّي لَتُبْعَثُنَّ ثُمَّ لَتُنَبَّؤُنَّ بِمَا عَمِلْتُمْ وَذَلِكَ عَلَى اللهِ يَسِيرٌ﴾ (التغابن: 7)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: (மரணித்த பின்னர் உயிர் கொடுத்து) எழுப்பப்பட மாட்டோம் என்று நிச்சயமாக நிராகரிப்பவர்கள் எண்ணிக்கொண்டு இருக்கின்றனர். (நபியே!) நீங்கள் கூறுங்கள்: "அவ்வாறன்று. என் இறைவன் மீது சத்தியமாக! மெய்யாகவே நீங்கள் எழுப்பப் படுவீர்கள். நீங்கள் செய்து கொண்டிருப்பவைகளைப் பற்றி பின்னர் நீங்கள் அறிவுறுத்தவும் படுவீர்கள். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதே." (ஸூரதுத் தகாபுன்: 7)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿فَتَوَلَّ عَنْهُمْ يَوْمَ يَدْعُ الدَّاعِ إِلَى شَيْءٍ نُكُرٍ * خُشَّعًا أَبْصَارُهُمْ يَخْرُجُونَ مِنَ الْأَجْدَاثِ كَأَنَّهُمْ جَرَادٌ مُنْتَشِرٌ * مُهْطِعِينَ إِلَى الدَّاعِ يَقُولُ الْكَافِرُونَ هَذَا يَوْمٌ عَسِرٌ﴾ (القمر: 6 - 8)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: ஆகவே, (நபியே!) நீங்கள் அவர்களைப் புறக்கணித்து விடுங்கள். இவர்கள் வெறுக்கும் (அந்தக் கேள்வி கணக்கு) விஷயத்திற்காக (இஸ்ராஃபீல் என்னும்) அழைப்பவர் அழைக்கும் நாளில், * (அந்நாளில்) இவர்கள் கீழ் நோக்கிய பார்வையுடன் சமாதிகளிலிருந்து வெளிப்பட்டுப் பரவிக் கிடக்கும் வெட்டுக் கிளியைப்போல் அழைப்பவரிடம் விரைந்தோடி வருவார்கள். * இது மிக கஷ்டமான நாள் என்றும் அந்நிராகரிப்பவர்கள் (அச்சமயம்) கூறுவார்கள். (ஸூரதுல் கமர்: 6-8)

وَقَوْلُهُ تعالى: ﴿فَأَمَّا مَنْ أُوتِيَ كِتَابَهُ بِيَمِينِهِ * فَسَوْفَ يُحَاسَبُ حِسَابًا يَسِيرًا * وَيَنْقَلِبُ إِلَى أَهْلِهِ مَسْرُورًا* وَأَمَّا مَنْ أُوتِيَ كِتَابَهُ وَرَاءَ ظَهْرِهِ * فَسَوْفَ يَدْعُو ثُبُورًا * وَيَصْلَى سَعِيرًا﴾ (الانشقاق: 6-12)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: ஆகவே, (அந்நாளில்) எவருடைய வலது கையில் அவருடைய ஏடு கொடுக்கப்படுகின்றதோ, * அவன் மிக்க இலகுவாகக் கேள்வி கணக்குக் கேட்கப்படுவார். * அவர் சந்தோஷப்பட்டவனாக(ச் சுவனபதியிலுள்ள) தன்னுடைய குடும்பத்தார்களிடம் திரும்புவான். * எவனுடைய செயலேடு அவனுடைய முதுகுப்புறம் கொடுக்கப்பட்டதோ, * அவன், (தனக்குக்) கேடுதான் என்று சப்தமிட்டுக்கொண்டே, * நரகத்தில் நுழைவான். (ஸூரதுல் இன்ஷிகாக்: 6-12)

وَقَوْلُهُ تعالى: ﴿يَوْمَ نَدْعُو كُلَّ أُنَاسٍ بِإِمَامِهِمْ ۖ فَمَنْ أُوتِيَ كِتَابَهُ بِيَمِينِهِ فَأُولَٰئِكَ يَقْرَءُونَ كِتَابَهُمْ وَلَا يُظْلَمُونَ فَتِيلًا * وَمَنْ كَانَ فِي هَٰذِهِ أَعْمَىٰ فَهُوَ فِي الْآخِرَةِ أَعْمَىٰ وَأَضَلُّ سَبِيلًا﴾ (الإسراء: 71 – 72)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "ஒவ்வொரு மனிதனையும் அவர்களின் தலைவர்களுடன் (விசாரணைக்காக) நாம் அழைக்கும் நாளில், அவர்களின் (தினசரி குறிப்புப்) புத்தகம் அவர்களுடைய வலது கையில் கொடுக்கப் பட்டால் அவர்கள் தங்களுடைய அ(த் தினசரி குறிப்பு)ப் புத்தகத்தை (மிக்க மகிழ்ச்சியோடு) வாசிப்பார்கள். (அவர்களுடைய கூலியில்) ஓர் அணுவளவு (குறைத்து)ம் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். * எவர்கள் இம்மையில் (நேரான வழியைக் காணாது) குருடர்களாகி விட்டார்களோ அவர்கள் மறுமையிலும் குருடர்களாகவும்; மேலும் அவர்கள் வழி தவறியவர்களாகவும் இருப்பார்கள்." (ஸூரது இஸ்ரா: 71-72)

36. فَإِذَا قِيْلَ لَكَ: هَلِ المُؤْمِنُونَ يَرَوْنَ رَبَّهُمْ يَوْمَ الْقِيَامَةِ؟ فَقُلْ: نَعَمْ يَرَوْنَهُ فِي عَرَصَاتِ الْقِيَامَةِ وَفِي الْجَنَّةِ

36. கேள்வி: மறுமை நாளில் முஃமின்கள் அவர்களுடைய இரட்சகனைப் பார்ப்பார்களா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: ஆம், அவர்கள் அவனை மறுமை நாளின் வெட்ட வெளியிலும் சுவனத்திலும் காண்பார்கள். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وُجُوهٌ يَوْمَئِذٍ نَاضِرَةٌ * إِلَى رَبِّهَا نَاظِرَةٌ﴾ (القيامة: 22-23)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: அந்நாளில் சில(ருடைய) முகங்கள் மிக்க மகிழ்ச்சி யுடையவையாக இருக்கும். * (அவை) தங்கள் இறைவனைப் பார்த்தவண்ணமாக இருக்கும். (ஸூரதுல் கியாமஹ்: 22-23)

وَفِي الصَّحِيْحَيْنِ مِنْ حَدِيْثِ جَرِيْرِ بْنِ عَبْدِاللهِ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: ((إِنَّكُمْ سَتَرَوْنَ رَبَّكُمْ يَوْمَ الْقِيَامَةِ)).

ஜரீர் இப்னு அப்தில்லாஹ் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்: நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நிச்சயமாக உங்கள் இரட்சகனை மறுமை நாளில் நீங்கள் காண்பீர்கள்.]] (புஹாரி, முஸ்லிம்)

وَأَخْرَجَ مُسْلِمٌ مِنْ طَرِيْقِ حَمَّادِ بْنِ سَلَمَةَ، عَنْ ثَابِتٍ، عَنْ عَبْدِالرَّحْمَنِ بْنِ أَبِي لَيْلَى، عَنْ صُهَيْبٍ -رَضِيَ اللهُ عَنْهُ- أَنَّ النَّبِيَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ- قَالَ: (إِذَا أُدْخِلَ أَهْلُ الجَنَّةِ الجَنَّةَ يَقُوْلُ اللهُ تَبَارَكَ وَتَعَالَى: تُرِيْدُوْنَ شَيْئًا أَزِيْدُكُمْ؟ فَيَقُوْلُوْنَ: أَلَمْ تُبَيِّضْ وُجُوْهَنَا؟ أَلَمْ تُدْخِلْنَا الجَنَّةَ وَتُنَجِّنَا مِنَ النَارِ؟ قَالَ: فَيَكْشِفُ الحِجَابَ، فَمَا أُعْطُوا شَيْئًا أَحَبَّ إِلَيْهِمْ مِنَ النَّظَرِ إِلَى رَبِّهِمْ عَزَّ وَجَلَّ)(1). أَخْرَجَهُ مُسْلِمٌ

மேலும் ஹம்மாத் இப்னு ஸலமா அவர்கள்; ஸாபித் அவர்களைத் தொட்டும்; அவர் அப்திர்ரஹ்மான் இப்னு அபீலைலாவைத் தொட்டும் அவர்கள் சுஹைப் றழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் வருகின்றது; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[சுவனவாசிகள் சுவனத்தில் நுழைவிக்கப் பட்டால், உயர்ந்தவனாகிய வளம்பெற்ற அல்லாஹ்

கூறுவான்: உங்களுக்கு வேறு ஏதாவது ஒன்றை நான் அதிகரித்துத் தர வேண்டுமா? அவர்கள் கூறுவார்கள்: நீ எங்களுடைய முகங்களை வெண்மையாக்கிவிட வில்லையா? நீ எங்களை சுவனத்தில் நுழைவிக்கவில்லையா? மேலும் எங்களை நீ நரகத்திலிருந்து பாதுகாக்கவில்லையா? என வினவுவார்கள். அப்போது, திரையை அவன் நீக்குவான். கண்ணியமான மகத்துவம் மிக்க அவர்களுடைய இரட்சகனைப்பார்ப்பதைவிட அவர்களுக்கு மிக விருப்பமான வேறு ஒன்றும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.]][6]

وَالْكُفَّارُ لَا يَرَوْنَ اللهَ عَزَّ وَجَلَّ يَوْمَ الْقِيَامَةِ

கண்ணியமான மகத்துவம் மிக்க அல்லாஹ்வை காபிர்கள் மறுமை நாளில் பார்க்கமாட்டார்கள்.

---

[6] இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களைத் தொட்டும் வந்த ஸஹீஹான ஒரு ஹதீஸாகும். இதிலே வழங்கப்பட்ட விமர்சனத்தை நான் பூரணமானதாகக் கண்டு கொள்ளவில்லை.
இமாம் முஸ்லிம் “தம்யீஸ்” என்ற நூலிலே ஸாபித் அவர்களிடம் மக்களிலேயே மிக உறுதியானவர் ஹம்மாத் இப்னு ஸலமாதான் என்பதில் ஏகோபித்த ஒரு கருத்தைக் கொண்டுவந்திருக்கிறார்; மேலும் ஸாபித் உடைய விடயத்தில் எவர் ஹம்மாத் இப்னு ஸலமாவுக்கு மறுபடுகின்றாரோ; ஹம்மாதுடைய கூற்றே ஏற்றுக் கொள்ளப்பட்ட கூற்றாகும். என்று இப்னு மயீன் கூறுகின்றார்.
மேலும் அதிலே கண்ணியமான மகத்துவம் மிக்க அல்லாஹ்வுடைய இந்த கூற்றிற்குத் தெளிவு இருக்கின்றது. ஸூரது ஆல-இம்ரானிலிருந்து வரக்கூடிய இரண்டு வசனங்கள்:

﴿يَّوْمَ تَبْيَضُّ وُجُوْهٌ وَّتَسْوَدُّ وُجُوْهٌ ۚ فَاَمَّا الَّذِيْنَ اسْوَدَّتْ وُجُوْهُهُمْ اَكَفَرْتُمْ بَعْدَ اِيْمَانِكُمْ فَذُوْقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُوْنَ ۞ وَاَمَّا الَّذِيْنَ ابْيَضَّتْ وُجُوْهُهُمْ فَفِىْ رَحْمَةِ اللّٰهِ ؕ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ﴾

ஒருநாளில் சில முகங்கள் (சந்தோஷத்தால் பிரகாசமுள்ள) வெண்மையாகவும், சில முகங்கள் (துக்கத்தால்) கறுத்து (வாடியு)மிருக்கும். எவர்களுடைய முகங்கள் கறுத்து (வாடி) இருக்கின்றனவோ (அவர்களை நோக்கி) "நீங்கள் நம்பிக்கை கொண்டபின் (அதனை) நிராகரித்து விட்டீர்களா? ஆகவே, உங்கள் நிராகரிப்பின் காரணமாக நரக வேதனையை சுவைத்துக் கொண்டு இருங்கள்" (என்று கூறப்படும்.) * எவர்களுடைய முகங்கள் (மகிழ்ச்சியால் பிரகாசமுள்ள) வெண்மையாக இருக்கின்றனவோ (அவர்களை நோக்கி) "நீங்கள் அல்லாஹ்வின் அருளில் தங்கிவிடுங்கள்" (என்று கூறப்படும்.) அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள். (ஸூறதுல் ஆல-இம்ரான்: 106-107)

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿كَلَّا إِنَّهُمْ عَنْ رَبِّهِمْ يَوْمَئِذٍ لَمَحْجُوبُونَ﴾ (المطففين: 15)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: (விசாரணைக்காகக் கொண்டு வரப்படும்) அந்நாளில்நிச்சயமாக இவர்கள் தங்கள் இறைவனை விட்டும் தடுக்கப்பட்டு விடுவார்கள். (ஸூரதுல் முதப்பிபீன்: 15)

37. فَإِذَا قِيْلَ لَكَ: مَاذَا تَعْتَقِدُ فِيْ الْقُرْآنِ الْكَرِيْمِ الَّذِيْ فِي الْمُصْحَفِ؟ فَقُلْ: أَعْتَقِدُ أَنَّهُ كَلَامُ اللهِ عَزَّ وَجَلَّ، لَيْسَ بِمَخْلُوْقٍ

37. கேள்வி: இந்த முஸ்ஹப்பிலே இருக்கக்கூடிய சங்கை மிக்க அல்-குர்ஆனிலே எதனை நீ நம்பிக்கை கொண்டிருக்கின்றாய்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: நிச்சயமாக அது கண்ணியமான; மகத்துவம் மிக்க அல்லாஹ்வுடைய பேச்சு; அது படைக்கப்படவில்லை. என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَإِنْ أَحَدٌ مِنَ الْمُشْرِكِينَ اسْتَجَارَكَ فَأَجِرْهُ حَتَّى يَسْمَعَ كَلَامَ اللهِ﴾ (التوبة: 6)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: (நபியே!) இணைவைத்து வணங்குபவர்களில் ஒருவரேனும் உங்களிடம் பாதுகாப்பைக் கோரினால், அல்லாஹ்வுடைய பேச்சை அவன் செவியுறும் வரையில் அவனுக்கு பாதுகாப்பு அளியுங்கள். (ஸூரதுத் தவ்பா: 6)

38. فَإِذَا قِيْلَ لَكَ: هَلِ الْقُرْآنُ عَرَبِيٌّ أَمْ أَعْجَمِيٌّ؟ فَقُلْ: هُوَ عَرَبِيٌّ

38. கேள்வி: அல்-குர்ஆன் அரபு மொழியைச் சார்ந்ததா? அல்லது அரபு அல்லாத மொழியைச் சார்ந்ததா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது அல்-குர்ஆன் அரபு மொழியைச் சார்ந்தது. என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّا جَعَلْنَاهُ قُرْآنًا عَرَبِيًّا لَعَلَّكُمْ تَعْقِلُونَ﴾ (الزخرف: 3)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: “(மக்காவாசிகளே!) நீங்கள் (எளிதில்) விளங்கிக்கொள்ளும் பொருட்டே இவ்வேதத்தை (நீங்கள் பேசும் உங்களுடைய) அரபி மொழியில் அமைத்தோம்.” (ஸூரதுஸ் ஸுஹ்ருப்; 3)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿نَزَلَ بِهِ الرُّوحُ الْأَمِينُ * عَلَى قَلْبِكَ لِتَكُونَ مِنَ الْمُنْذِرِينَ * بِلِسَانٍ عَرَبِيٍّ مُبِينٍ﴾ (الشعراء: 193-195)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: (இறைவனின் கட்டளைப் பிரகாரம்) ரூஹுல் அமீன் (என்னும் ஜிப்ரீல்) இதனை உங்களது உள்ளத்தில் இறக்கி வைத்தார். * (மனிதர்களுக்கு) நீங்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக, * தெளிவான அரபி மொழியில் (இதனை இறக்கி வைத்தான்). (ஸூரதுஷ் ஷுஅரா: 193-195)

39. فَإِذَا قِيْلَ لَكَ: هَلْ لِلّهِ أَسْمَاءٌ وَصِفَّاتٌ؟ فَقُلْ: نَعَمْ لَهُ أَسْمَاءٌ وَصِفَاتٌ تَلِيْقُ بِجَلَالِهِ

39. கேள்வி: அல்லாஹ்வுக்கு பெயர்கள் மற்றும் பண்புகள் உள்ளனவா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: ஆம், அவனுக்கு அவனுடைய கண்ணியத்திற்கு தக்க விதத்தில் பெயர்களும் மற்றும் பண்புகளும் உள்ளன. என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَلِلّهِ الْأَسْمَاءُ الْحُسْنَى فَادْعُوهُ بِهَا﴾ (الأعراف: 180)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: அல்லாஹ்வுக்கு மிக அழகான பெயர்கள் இருக்கின்றன. ஆகவே, அவற்றைக்கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள். (ஸூரதுல் அஃராப்: 180)

وَقَوْلُهُ: ﴿ وَلِلّهِ الْمَثَلُ الْأَعْلَى وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ﴾ (النحل: 60)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: “அல்லாஹ்வுக்கோ மிக்க மேலான வர்ணிப்புகள் உண்டு. அவன் (அனைவரையும்) மிகைத் தவனும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.” (ஸூரதுந் நஹ்ல்: 60)

وَقَالَ تَعَالَى: ﴿قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ * اللَّهُ الصَّمَدُ * لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ * وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ﴾ (الإخلاص)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: “(நபியே! மனிதர்களை நோக்கி,) நீங்கள் கூறுங்கள்: அல்லாஹ் ஒருவன்தான். * (அந்த) அல்லாஹ் (எவருடைய) தேவையுமற்றவன். (அனைத்தும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன.) * அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை. (ஆகவே, அவனுக்குத் தகப்பனுமில்லை சந்ததியுமில்லை.) * (தவிர) அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை.” (ஸூரதுல் இஃக்லாஸ்)

وَفِي الصَحِيحَيْنِ مِن حَدِيثِ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا أَنَّ رَجُلًا قَالَ: (لِأَنَّهَا صِفَةُ الرَّحْمَنِ)، فَأَقَرَّهُ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ عَلَى ذَلِكَ

ஸஹீஹான இரண்டு கிரந்தங்களிலேயும் ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தொட்டும் வருகின்றது; நிச்சயமாக ஒரு மனிதர் கூறினார்; [[ஏனெனில் அது (ஸூரதுல் இஃக்லாஸ்) அர்ரஹ்மானுடைய பண்பாகும்.]] இதனை அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் அதன்படியே அங்கீகரித்தார்கள்.[7]

وَأَسْمَاءُ اللهِ عَزَّ وَجَلَّ غَيْرُ مَحْصُورَةٍ بِعَدَدٍ مَعْلُوْمٍ لَنَا؛ لِقَوْلِ النَّبِيِّ – صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ-: ((لَا أُحْصِي ثَنَاءً عَلَيْكَ...)) أَخْرَجَهُ مُسْلِمٌ مَنْ حَدِيثِ عَائِشَةَ –رَضِيَ اللهُ عَنْهَا (أَخْرَجَهُ مُسْلِمٌ)

[7] அல்குர்ஆனின் மூன்றில் ஒன்றுக்கு சமமான இந்த மகத்துவமிக்க ஸூராவின் சிறப்பினை இது உணர்த்தி நிக்கின்றது. இது புகாரியிலே அபூ ஸயீத் அல்-குத்ரி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸிலும்; மேலும் முஸ்லிமிலே அபூ ஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸிலும் பதிவாகி உள்ளது.

மேலும் அல்லாஹ்வுடைய பெயர்கள் எங்களுக்குத் தெரிந்த எண்ணிக்கையைக் கொண்டு வரையறுக்கப்படவில்லை. இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் கூற்று: [[உனக்கு இருக்கின்ற புகழை என்னால் வரையறுத்துவிட முடியாது.]] ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸிலிருந்து இமாம் முஸ்லிம் அறிவிக்கின்றார்.[8]

40. فَإِذَا قِيْلَ لَكَ: هَلْ أَحَدٌ غَيْرُ اللهِ يَعْلَمُ الْغَيْبَ؟ فَقُلْ: لَا أَحَدَ يَعْلَمُ الْغَيْبَ إِلَّا اللهُ

40. கேள்வி: அல்லாஹ் அல்லாத வேறு ஒருவர் மறைவானவற்றை அறிவாரா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த ஒருவரும் மறைவானவற்றை அறியமாட்டார்.என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَمَا كَانَ اللهُ لِيُطْلِعَكُمْ عَلَى الْغَيْبِ﴾ (آل عمران: 179)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: அன்றி மறைவான வற்றையும் அல்லாஹ் உங்களுக்கு அறிவிக்க மாட்டான். (ஸூறதுல் ஆல-இம்ரான்: 179)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿فَقُلْ إِنَّمَا الْغَيْبُ لِلَّهِ﴾ (يونس: 20)

"மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: மறைவான விஷயங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியனவே." (ஸூறது யூனுஸ்: 20)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿وَعِنْدَهُ مَفَاتِحُ الْغَيْبِ لَا يَعْلَمُهَا إِلَّا هُوَ﴾ (الأنعام: 59)

"மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்(றில் உள்ளவற்)றை அவனையன்றி வேறெவரும் அறிய மாட்டார். (ஸூறதுல் அன்ஆம்: 59)

---

[8] அல்லாஹ்வுடைய அழகிய திரு நாமங்களில் எவைகளுக்கெல்லாம் அல்-குர்ஆன் மற்றும் ஸஹீஹான ஸுன்னாவிலிருந்து ஆதாரங்களை அல்லாஹ் திறந்து தந்துள்ளானோ அவைகளை இந்நூலின் இறுதியில் நாம் கூறியிருக்கின்றோம்.

41. فَإِذَا قِيْلَ لَكَ: مَتَى تَقُوْمُ السَّاعَةُ؟ فَقُلْ: أَمْرُ السَّاعَةِ مِنْ أُمُورِ الْغَيْبِ الَّتِي لَا يَعْلَمُهَا إِلَّا اللهُ

41. கேள்வி: மறுமை எப்பொழுது நிகழும்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: மறுமையுடைய விடயம் மறைவான விடயங்களில் நின்றும் உள்ளதாகும். அதை அல்லாஹ்வையே அன்றி வேறு எவரும் அறியமாட்டார். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّ اللهَ عِنْدَهُ عِلْمُ السَّاعَةِ﴾ (لقمان: 34)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: நிச்சயமாக (உலக முடிவு) காலத்தைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடத்தில் (மட்டும்)தான் இருக்கின்றது. (ஸூறதுல் லுக்மான்: 34)

وَقَوْلُهُ: ﴿إِلَيْهِ يُرَدُّ عِلْمُ السَّاعَةِ﴾ (فصلت: 47)

"மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: மறுமையைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே விடப்பட்டுள்ளது. (ஸூறது புஸ்ஸிலத்: 47)

وَقَوْلُ النَّبِي –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ-: ((لَا يَعْلَمُ مَتَى تَقُومُ السَّاعَةُ إِلَّا اللهُ)). أَخْرَجَهُ الْبُخَارِيُّ مِنْ حَدِيْثِ ابْنِ عُمَرَ –رَضِيَ اللهُ عَنْهُمَا (أَخْرَجَهُ الْبُخَارِيُّ)

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் கூற்று: [[மறுமை எப்பொழுது நிகழும் என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அறியமாட்டார்கள்.]] இதை இமாம் புஹாரி இப்னு உமர் றழியல்லாஹு அன்ஹுமா அவர்களின் ஹதீஸிலிருந்து அறிவிக்கின்றார்.

42. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ شُرُوْطُ قُبُولِ الْعَمَلِ؟ فَقُلْ: ثَلَاثَةٌ:

42. கேள்வி: ஒரு அமல் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: மூன்று ஆகும். என்று நீ கூறு.

١ـ الإِسْلَامُ، فَالْكَافِرُ لَا يَقْبَلُ اللهُ عَمَلَهُ

1 – அல்-இஸ்லாம்: (முஸ்லிமாக இருத்தல்) ஒரு காபிர் உடைய அமலை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَقَدِمْنَا إِلَى مَا عَمِلُوا مِنْ عَمَلٍ فَجَعَلْنَاهُ هَبَاءً مَنْثُورًا﴾ (الفرقان: 23)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: (இம்மையில்) அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை நாம் நோக்கினால் (அதில் யாதொரு நன்மையும் இல்லாததனால்) பறக்கும் தூசிகளைப் போல் அவைகளை நாம் ஆக்கிவிடுவோம். (ஸூறதுல் புர்கான்: 23)

﴿إِنَّمَا يَتَقَبَّلُ اللَّهُ مِنَ الْمُتَّقِينَ﴾ (المائدة : 27)

"மெய்யாகவே, அல்லாஹ் ஏற்றுக் கொள்வதெல்லாம் இறை அச்சமுள்ளவர்களிடம் இருந்துதான்" என்று பதில் கூறினார்." (ஸூறதுல் மாயிதஹ்: 27)

٢ـ الإِخْلَاصُ

2 – அல்-இஹ்லாஸ்: (மனத்தூய்மை.)

وَالدَّلِيْلُ: ﴿وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ﴾ (البينة: 5)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்;" (ஸூறதுல் பையினஹ்: 5)

وَفِي حَدِيْثِ أَبِي هُرَيْرَةَ الْقُدْسِيِّ أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: (قالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَى أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ. مَنْ عَمِلَ عَمَلًا أَشْرَكَ فِيْهِ مَعِي غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ) (رَوَاهُ مُسْلِمٌ)

அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸுல் குத்ஸியிலே வருவதாவது; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: வளம் பெற்ற உயர்ந்தவனாகிய அல்லாஹ் கூறுகின்றான்; [[நான் இணைவைப்பை விட்டும்; இணையாளர்களிலிருந்து தேவையற்றவனாக

இருக்கின்றேன். எவன் ஒரு அமலைச் செய்து அதிலே என்னை அன்றி, என்னுடன் வேறு ஒருவனைக் கூட்டுச் சேர்க்கின்றானோ அவனையும் அவனது இணைவைப்பையும் நான் விட்டுவிடுவேன்.]] (இதனை இமாம் முஸ்லிம் அறிவிக்கின்றார்)

٣- المُتَابَعَةُ لِرَسُولِ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ

3 – அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களைப் பின்பற்றுதல்:

وَالدَّلِيْلُ حَدِيْثُ أُمِّ المُؤمِنِيْنَ عَائِشَةَ –رَضِيَ اللهُ عَنْهَا–: أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– قَالَ: (مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ) (أَخْرَجَهُ مُسْلِمٌ)

அதற்கான ஆதாரம்: முஃமின்களின் தாய் ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ்; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[எங்களுடைய மார்க்கத்தில் இல்லாத ஒரு விடயத்தை எவர் செய்கின்றாரோ அது மறுக்கப்படும்.]] (இதனை இமாம் முஸ்லிம் அறிவிக்கின்றார்)

43. فَإِذَا قِيْلَ لَكَ: كَمْ أَنْوَاعُ التَّوَسُّلِ المَشْرُوعِ؟ فَقُلْ: ثَلَاثَةُ أَنْوَاعٍ:

43. கேள்வி: மார்க்கமாக்கப்பட்டுள்ள அத்-தவஸ்ஸுல் (அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேடுதல்) உடைய வகைகள் எத்தனை? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அவை மூன்று வகைகள். என்று நீ கூறு.

١ - التَّوَسُّلُ بِأَسْمَاءِ اللهِ وَصِفَاتِهِ

1 – அல்லாஹ்வுடைய பெயர்கள் மற்றும் அவனுடைய பண்புகளைக் கொண்டு அல்லாஹ்வின் நெறுக்கத்தைத் தேடுதல்.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَ لِلّٰهِ الْأَسْمَاءُ الْحُسْنَى فَادْعُوهُ بِهَا﴾ (الأعراف: 180)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்," (ஸூறதுல் அஃராப் : 180)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿وَأَدْخِلْنِي بِرَحْمَتِكَ فِي عِبَادِكَ الصَّالِحِينَ﴾ (النمل: 19)

உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: "இன்னும் உம் இரக்கத்தைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!" (ஸூறதுந் நம்ல்: 19)

٢ ـ تَوَسُّلُ الْعَبْدِ إِلَى اللهِ تَعَالَى بِعَمَلِهِ الصَّالِحِ

2 – ஒரு அடியான் உயர்ந்தவனாகிய அல்லாஹ்விடத்தில் அவனுடைய நல்லமலைக் கொண்டு அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேடுதல்:

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿الَّذِينَ يَقُولُونَ رَبَّنَا إِنَّنَا آمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ﴾ (آل عمران: 16)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: இத்தகையவர்கள் (தங்கள் இறைவனை நோக்கி) "எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் உன்னை நம்பிக்கை கொள்கின்றோம். ஆதலால் நீ எங்களுடைய பாவங்களை மன்னித்து (அருள் புரிந்து, நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களைக் காப்பாற்றுவாயாக!" என்றும் (தொடர்ந்து) பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள். (ஸூறது ஆல-இம்ரான்: 16)

وَقَوْلُهُ: ﴿رَبَّنَا آمَنَّا بِمَا أَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُولَ فَاكْتُبْنَا مَعَ الشَّاهِدِينَ﴾ (آل عمران: 53)

உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: (அன்றி) "எங்கள் இறைவனே! நீ இறக்கிவைத்த (வேதத்)தை நாங்கள் நம்புகின்றோம். (உன்னுடைய) இத்தூதரையும் நாங்கள் பின்பற்றி நடக்கின்றோம். ஆதலால், (அவரை) உண்மைப் படுத்தியவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக!" (என்றும் அந்தத் தோழர்கள் பிரார்த்தித்தனர்.) (ஸூறது ஆல-இம்ரான்: 53)

وَمِنَ السُّنَّةِ حَدِيْثُ الثَّلَاثَةِ الَّذِيْنَ انْطَبَقَتْ عَلَيْهِمْ صَخْرَةٌ، فَسَدَّتْ عَلَيْهِمْ الْغَارَ، فَتَوَسَّلَ كُلُّ وَاحِدٍ مِنْهُمْ بِخَالِصِ عَمَلِهِ مُتَّفَقٌ عَلَيْهِ مِنْ حَدِيثِ عَبْدِاللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا

மேலும் அந்த மூவருடைய ஹதீஸ்; அவர்களுடைய குகையை ஒரு பெரிய பாராங்கல் வந்து அடைத்துக் கொண்ட விடயம் ஸுன்னாவிலே உள்ளது. எனவே அவர்களில் ஒவ்வொருவரும் தாம் செய்த மனத் தூய்மையான அமலைக் கொண்டு அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேடினார்கள். இது புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸிலிருந்து பதிவாகியுள்ளது.

٣ ـ التَّوَسُّلُ بِدُعَاءِ الرَّجُلِ الصَّالِحِ

3 – நல்ல மனிதருடைய துஆவைக் கொண்டு அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேடுதல்:

وَالدَّلِيْلُ حَدِيْثُ أَنَسِ بْنِ مَالِكٍ –رَضِيَ اللهُ عَنْهُ– قَالَ بَيْنَمَا رَسُولُ اللهِ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– يَخْطُبُ إِذْ جَاءَهُ رَجُلٌ فَقَالَ: يَا رَسُوْلَ اللهِ قَحِطَ الْمَطَرُ، فَادْعُ اللهَ أَنْ يَسْقِيْنَا، فَدَعَا فَمُطِرْنَا(1). (مُتَّفَقٌ عَلَيْهِ)

அதற்கான ஆதாரம்: அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்; அவர்கள் கூறினார்கள் அல்லாஹ்வுடைய தூதர் குத்பா உரை செய்துகொண்டிருந்த வேளையில் அவரிடத்தில் ஒரு மனிதர் வந்து; அல்லாஹ்வின் தூதரே! மழை நின்று பூமி வரண்டுவிட்டது. எனவே அல்லாஹ்விடம் எங்களுக்கு நீர் தருமாறு பிராா்த்தியுங்கள் என்று அவர் கூற; அவர்களும் பிரார்த்தித்தார்கள். எனவே எங்களுக்கு மழை பொழிந்தது.[9]

---

[9] இந்த ஹதீஸ், நிச்சயமாக அவர்கள் கண்ணியமான மேலும் மகத்துவம் மிக்க அல்லாஹ்வின் படைப்பினங்களில் மிகச் சிறந்தவருடைய துஆவைக் கொண்டு நெருங்கியுள்ளார்கள் என்பதைப் புலப்படுத்துகின்றது. மேலும் அவர்கள் அவர்களுடைய வீடுகளில் உட்கார்ந்துகொண்டு, உன்னிடத்தில் உன்னுடைய நபியுடைய பொருட்டைக் கொண்டு; அல்லது உன்னுடைய நபியுடைய உரிமையைக் கொண்டு கேட்கின்றோம் என்று கூறவில்லை. அது மார்க்கமாக்கப்பட்ட ஒன்றாக இருக்குமாயின், அதை அவர்கள் செய்திருப்பார்கள். என்றாலும் அவர்களில் எவரும் அவருடைய வாழ் நாளிலோ மேலும் அவரின் மரணத்திற்குப் பின்னரோ இதைச் செய்யவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் மரணத்திற்குப் பின்னர் உமர் இப்னு ஹத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மழை வேண்டினார்கள். அப்பாஸ்

44. فَإِذَا قِيْلَ لَكَ: هَلْ فِي الدِّيْنِ بِدْعَةٌ حَسَنَةٌ؟ فَقُلْ: كُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

44. கேள்வி: மார்க்கத்தில் அழகிய பித்அத் (நூதன அனுஷ்டானம்) என்பது இருக்கின்றதா? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அனைத்து பித்அத்துக்களும் (நூதன அனுஷ்டானங்களும்) வழிகேடாகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ حَدِيْثُ الْعِرْبَاضِ الْمَذْكُوْرِ بِرَقْمِ (19)، وَفِيْهِ: (كُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ).

அதற்கான ஆதாரம்: இலக்கம் 19வது கேள்வியில் கூறப்பட்ட இர்பாழ் இப்னு ஸாரியாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ். அதிலே [[அனைத்து பித்அத்துக்களும் (நூதன அனுஷ்டானங்களும்) வழிகேடாகும்.]]

ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அவர்களுக்காக துஆச் செய்யுமாறு வேண்டினார்கள். ஏனெனில் அவர் ஒரு ஸாலிஹான (நல்ல) மூத்த வயோதிபராக இருந்தார். இது பத்ஹுல் பாரியிலே பாகம்: 3 பக்கம்:150 இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
நிச்சயமாக கண்ணியமான, மகத்துவமிக்க அல்லாஹ்விடம் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரார்த்தித்தார்கள்.
அவருடைய பொருட்டை வைத்து அல்லாஹ்விடம் அவர்கள் நெருக்கத்தைத் தேடி இருந்தால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் பொருட்டை வைத்தும் அவர்கள் உயிருடன் இருக்கும் போதே, நெருக்கம் தேடி இருப்பார்கள். ஏனெனில் அவர் மிக மகத்துவம் மிக்க ஒருவராக இருந்தார். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.
மேலும் முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மழை வேண்டினார்கள். பிறகு கூறினார்கள்; யாஅல்லாஹ்! நிச்சயமாக எங்களில் மிக நல்லவரைக் கொண்டும் மேலும் எங்களில் மிகச் சிறந்தவரைக் கொண்டும் நாம் பரிந்துரையை வேண்டுகின்றோம். யாஅல்லாஹ்! நிச்சயமாக இன்றைய தினம் நாம் உன்னிடத்தில் யஸீத் இப்னுல் அஸ்வத் அல்-ஜுரஹி அவரைக் கொண்டு பரிந்துரையை வேண்டுகின்றோம். யஸீதே! நீ உன்னுடைய இரு கைகளையும் அல்லாஹ்விடம் உயர்த்துவாயாக. எனவே அவர் அவருடைய இரு கைகளையும் உயர்த்தினார். மக்கள் அவர்களுடைய வீடுகளை அடைந்து அதை நெருங்கிவிடவுமில்லை அவர்களுக்கு அல்லாஹ் மழையைக் கொடுத்தான். சரியான அறிவிப்புத் தொடரில் இதை இப்னு அஸாகிர் அவர்கள் 'தாரீஹு திமஷ்க்' என்ற நூலில் அறிவிக்கின்றார்.(65/112;113). மேலும் பார்க்க: "அத்தவஸ்ஸுல்" இது இமாம் அல்பானி ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்குறிய நூல். பக்கம்:45.

وَحَدِيْثُ جَابِرِ ابْنِ عَبْدِاللهِ –رَضِيَ اللهُ عَنْهُما– أَنَّ النَّبِيَّ –صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ– كَانَ إذا خَطَبَ... يَقُوْلُ: (أَمَّا بَعدُ: فَإِنَّ خَيْرَ الْحَدِيْثِ كِتَابُ اللهِ، وَخَيْرَ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرَّ الْأُمُوْرِ مُحْدَثَاتُهَا، وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ) أَخْرَجَهُ مُسْلِمٌ

மேலும் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ்: நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் குத்பா உரை செய்தால் இவ்வாறு கூறுவார்கள்: [[இதற்குப் பின்; நிச்சயமாக பேச்சுக்களில் சிறந்தது அல்லாஹ்வுடைய பேச்சாகும்; மேலும் வழிகாட்டலில் சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களின் வழிகாட்டலாகும்; மேலும் விடயங்களிலே மிகக் கெட்டது அதிலே புதிதாக உண்டாக்கப்பட்டவைகள். மேலும் அனைத்து பித்அத்துக்களும் (நூதன அனுஷ்டானங்களும்) வழிகேடு.]] இதை இமாம் முஸ்லிம் அறிவிக்கின்றார்.

وَعَنْ أَبِيْ سَعِيْدِ الْخُدْرِيِّ – رَضِيَ اللهُ عَنْهُ – أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ قال: ((أَنَا فَرَطُكُمْ عَلَى الحَوْضِ فَمَنْ وَرَدَهُ شَرِبَ مِنْهُ، وَمَنْ شَرِبَ مِنْهُ لَمْ يَظْمَأْ بَعدَهُ أَبَدًا، لَيَرِدُ عَلَيَّ أَقْوَامٌ أَعْرِفُهُمْ، وَيَعْرِفُوْنِي ثُمَّ يُحَالُ بَيْنِي وَبَيْنَهُمْ، قَالَ: إِنَّهُمْ مِنِّي فَيُقَالُ: إِنَّكَ لَا تَدْرِي مَا بَدَّلُوا بَعْدَكَ، فَأَقُولُ: سُحْقًا سُحْقًا لِمَنْ بَدَّلَ بَعْدِي)) (مُتَّفَقٌ عَلَيْهِ)

மேலும் அபூ ஸயீத் அல்-குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் வருகின்றது; நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[நான் உங்களில் “அல்-ஹவ்ழ்” நீர்தடாகத்திற்கு முதலாமவனாக இருப்பேன். எனவே எவர் அதை வந்தடைகின்றாரோ; அவர் அதிலிருந்து அருந்துவார். எவர் அதிலிருந்து அருந்தினாரோ; அதற்குப் பின்னால் ஒரு பொழுதும் அவர் தாகித்திருக்க மாட்டார். திட்டமாக என்னிடத்தில் சில கூட்டங்கள் வருவார்கள் அவர்களை நான் அறிந்தவனாக இருப்பேன். மேலும் அவர்கள் என்னை அறிந்தவர்களாக இருப்பார்கள். பிறகு எனக்கும் அவர்களுக்கும் மத்தியில் திரை இடப்படும். நிச்சயமாக அவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் என்று நான் கூற; அவர்கள் உமக்குப் பின்னால், எதை எல்லாம் மாற்றியமைத்தார்கள் என்பது உமக்குத் தெரியாது

என்று கூறப்படும். எனக்குப் பின்னால் மாற்றியமைத்தவர்கள் தூரமாகுங்கள் தூரமாகுங்கள் என்று நான் கூறுவேன்.]] (புஹாரி, முஸ்லிம்)

45. فَإِذَا قِيْلَ لَكَ: مَنْ شَرُّ الْبَرِيَّةِ الَّذِيْنَ يَجِبُ عَلَيْنَا بُغْضُهُمْ؟ فَقُلْ: هُمُ الْيَهُوْدُ، وَالنَّصَارَى، وَالمُشْرِكُوْنَ

45. கேள்வி: பூமியில் உள்ளவர்களில் நாம் கட்டாயமாக வெறுக்க வேண்டிய மிகக் கெட்டவர்கள் யார்? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அவர்கள் யூதர்கள், கிறிஸ்தவர்கள், இணைவைப்பாளர்கள் என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنَّ الَّذِينَ كَفَرُوا مِنْ أَهْلِ الْكِتَابِ وَالْمُشْرِكِينَ فِي نَارِ جَهَنَّمَ خَالِدِينَ فِيهَا أُولَئِكَ هُمْ شَرُّ الْبَرِيَّةِ﴾ (البينة: 6)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "ஆகவே, வேதத்தையுடையவர்களிலும், இணைவைத்து வணங்குபவர்களிலும், (இந்த நபியின் வரவை எதிர்பார்த்திருந்தவர்களில்) எவர்கள் (அவர்களை) நிராகரிக்கின்றார்களோ அவர்கள் நிச்சயமாக நரகத்தின் நெருப்பில்தான் இருப்பார்கள். அதில், அவர்கள் என்றென்றுமே தங்கிவிடுவார்கள். இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மகா கெட்டவர்கள்." (ஸூறதுல் பையினா: 6)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿لَا تَجِدُ قَوْمًا يُؤْمِنُونَ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ يُوَادُّونَ مَنْ حَادَّ اللهَ وَرَسُولَهُ﴾ (المجادلة: 22)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பும் சமூகத்தினர், அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர். (ஸூறதுல் முஜாதலா: 22)

46. فَإِذَا قِيْلَ لَكَ: مَا هِيَ الْدِّيْمُقْرَاطِيَّةُ؟ فَقُلْ: هِيَ حُكْمُ الشَّعْبِ نَفْسَهُ بِنَفْسِهِ، بِغَيْرِ كِتَابٍ وَلَا سُنَّةٍ

46. கேள்வி: ஜனநாயகம் என்றால் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது மக்கள் தமக்குத் தாமே குர்ஆன் ஸுன்னா இல்லாத ஒரு சட்டத்தை நிறுவுவதாகும். என்று நீ கூறு.

.47 فَإِذَا قِيْلَ لَكَ: مَا حُكْمُهَا؟ فَقُلْ: هِيَ شِرْكٌ أَكْبَرٌ

47. கேள்வி: அதன் சட்டம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அது மிகப் பெரிய ஷிர்க்காகும். என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿إِنِ الْحُكْمُ إِلَّا لِلَّهِ﴾ (يوسف: 40)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (வேறெவர்க்கும்) சட்டம் வகுக்கும் அதிகாரம் இல்லை. (ஸூறது யூஸுஃப் : 40)

وَقَوْلُهُ: ﴿وَلا يُشْرِكُ فِي حُكْمِهِ أَحَدًا﴾ (الكهف: 26)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: அவன் தன்னுடைய சட்டம் வகுக்கும் அதிகாரத்தில் வேறு எவரையும் கூட்டாக்கிக் கொள்வதுமில்லை” என்று (நபியே!) நீர் கூறும். (ஸூறதுல் கஹ்ஃப்: 26)

.48 فَإِذَا قِيْلَ لَكَ: مَا حَقِيْقَةُ الْإِنْتِخَابَاتِ؟ فَقُلْ: هِيَ مِنَ النِّظَامِ الدِّيْمُقْرَاطِيِّ الْمُنَابِذِ لِشَرْعِ اللهِ الْحَقِّ، وَهِيَ تَشَبُّهٌ بِالْكُفَّارِ، وَالتَّشَبُّهُ بِهِمْ لَا يَجُوْزُ، وَفِيْهَا ضَرَرٌ كَثِيْرٌ، وَلَيْسَ فِيْهَا أَيُّ نَفْعٍ وَلَا أَيُّ فَائِدَةٍ لِلْمُسْلِمِيْنَ، وَمِنْ أَهَمِّ أَضْرَارِهَا: مُسَاوَاةُ الْحَقِّ بِالْبَاطِلِ وَالمُحِقِّ بِالمُبْطِلِ حَسْبَ الْأَكْثَرِيَّةِ، وَتَضْيِيْعُ الْوَلَاءِ وَالْبَرَاءِ، وَتَمْزِيْقُ شَمْلِ المُسْلِمِيْنَ، وَإِلْقَاءُ الْعَدَاوَةِ وَالْبَغْضَاءِ وَالتَّحَزُّبِ وَالتَّعَصُّبِ بَيْنَهُمْ، وَالْغِشُّ، وَالْخِدَاعُ، وَالْإِحْتِيَالُ، وَالزُّوْرُ، وَضِيَاعُ الْأَوْقَاتِ وَالْأَمْوَالِ، وَإِهْدَارُ حِشْمَةِ النِّسَاءِ، وَزَعْزَعَةُ الثِّقَةِ فِي عُلُوْمِ الشَّرِيْعَةِ الْإِسْلَامِيَّةِ وَأَهْلِهَا.

48. கேள்வி: தேர்தல்களின் உண்மை நிலவரம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அல்லாஹ்வின் சத்திய மார்க்கத்தை எதிர்ப்பதற்குப் போடப்பட்ட ஜனநாயகத்தின் (மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும்) ஒரு ஒழுங்காகும். என்று நீ கூறு.

அது காபிர் (இறை நிராகரிப்பாளர்) களுக்கு ஒப்பானதாகும். காபிர்களுக்கு ஒப்பாக நடப்பது ஆகுமாகாது. அதிலே அதிகமான கெடுதிகள் உள்ளன. அதிலே எவ்வித நலவோ எவ்வித பிரயோசனமோ முஸ்லிம்களுக்கு இல்லை. அதன் கெடுதிகளில் மிக முக்கியமானவையாக: சத்தியத்தையும், அசத்தியத்தையும், சமத்துவப்படுத்தல். மேலும் சத்தியவாதியையும், அசத்தியவாதியையும் பெரும்பான்மையை அடிப்படையாக வைத்து சமத்துவப்படுத்தல்; அல்லாஹ்வுக்காக நேசம் கொள்ளுதல் அல்லாஹ்வுக்காக வெறுத்தல் என்ற அடிப்படையை வீணடித்தல்; முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கிழித்தெரிதல்; அவர்களுக்கிடையில் பகைமை, குரோதம், பிரிவினை வாதங்களை ஏற்படுத்தல். மேலும் ஏமாற்றுதல், மோசடி செய்தல், சதி செய்தல், பொய்யுரைத்தல், நேரங்களையும், பணங்களையும் வீணடித்தல்; பெண்களின் வெட்கத்தை நீக்குதல், இஸ்லாமிய மார்க்கத்தின் அறிவுகளினதும், மேலும் அந்த அறிவுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களினதும் நம்பிக்கைத் தன்மையை சீர்குலைத்தல்.

49. فَإِذَا قِيْلَ لَكَ: مَا حُكْمُ الْحِزْبِيَّةِ؟ فَقُلْ: اَلْحِزْبِيَّةُ حَرَامٌ، إِلَّا حِزْبُ اللهِ

49. கேள்வி: இயக்கவாதத்தின் சட்டம் என்ன? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: இயக்கவாதம் ஹராமாகும் (தடுக்கப்பட்டதாகும்). அல்லாஹ்வுடைய கூட்டத்தை தவிர என்று நீ கூறு.

وَالدَّلِيْلُ قَوْلُ اللهِ تَعَالَى: ﴿وَلَا تَكُونُوا مِنَ الْمُشْرِكِينَ * مِنَ الَّذِينَ فَرَّقُوا دِينَهُمْ وَكَانُوا شِيَعًا كُلُّ حِزْبٍ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ﴾ (الروم: 31-32)

அதற்கான ஆதாரம்: உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய கூற்று: "இணைவைப்போரில் நீங்களும் ஆகி விடாதீர்கள். * எவர்கள் தங்கள் மார்க்கத்தில் பிரிவினைகளை உண்டாக்கி (பல) பிரிவுகளாகப் பிரிந்து விட்டனரோ; (அவர்களில் ஆகி விட வேண்டாம். அவ்வாறு பிரிந்த) ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களிடமிருப்பதைக் கொண்டே மகிழ்வடைகிறார்கள்." . (ஸூறதுர் ரூம்: 31-32)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلا تَفَرَّقُوا﴾ (آل عمران: 103)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; (ஸூறது ஆல-இம்ரான்: 103)

وَقَوْلُهُ تَعَالَى: ﴿إِنَّ هَذِهِ أُمَّتُكُمْ أُمَّةً وَاحِدَةً وَأَنَا رَبُّكُمْ فَاعْبُدُونِ﴾ (الأنبياء: 92)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: நிச்சயமாக உங்கள் "உம்மத்து" - சமுதாயம் - (வேற்றுமை ஏதுமில்லா) ஒரே சமுதாயம் தான்; மேலும் நானே உங்கள் இறைவன். ஆகையால், என்னையே நீங்கள் வணங்குங்கள்.

وَقَوْلُهُ: ﴿أَلَا إِنَّ حِزْبَ اللهِ هُمُ الْمُفْلِحُونَ﴾ (المجادلة: 22)

மேலும் உயர்ந்தவனாகிய அல்லாஹ்வுடைய (இன்னுமொரு) கூற்று: அறிந்துகொள்க: நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர் தாம் வெற்றி பெறுவார்கள்.[10]

عَنْ عَبْدِاللهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ -رَضِيَ اللهُ عَنْهُما- قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ -صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَى آلِهِ وَسَلَّمَ-: ((... وَتَفْتَرِقُ أُمَّتِيْ عَلَى ثَلَاثٍ وَسَبْعِيْنَ مِلَّةً كُلُّهُمْ فِي النَّارِ إِلَّا مِلَّةً (أَيْ فِرْقَةً) وَاحِدَةً)). قَالُوْا: وَمَنْ هِيَ يَا رَسُوْلَ اللهِ؟ قَالَ: ((مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِيْ)) أَخْرَجَهُ التِّرْمِذِيُّ (26/5).وَلَهُ شَاهِدٌ مِنْ حَدِيْثِ مُعَاوِيَةَ -رَضِيَ اللهُ

[10] இமாம் ஷவ்கானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அவருடைய தப்ஸீரிலே கூறுகின்றார்கள்: "அல்லாஹ்வுடைய கூட்டம் என்பவர்கள் அவனுடைய ஏவல்களை எடுத்து நடக்கக் கூடிய அவனுடைய அணியாகும்." நான் கூறுகின்றேன்: நிச்சயமாக அல்லாஹ்வுடைய கூட்டம் என்பது அவனுடைய வேதத்தையும் அவனுடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்களுடைய ஸுன்னாவையும் பற்றிப் பிடிப்பதன் மூலம் அவனுடைய ஏவல்களை எடுத்து நடப்பவர்கள் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

عَنْهُ–، أَخْرَجَهُ أَبُوْ دَاوُدَ رَقَم (4597)، وَأَحْمَدُ (102/4)، وَلَهُ شَوَاهِدُ أُخْرَى، فَالْحَدِيْثُ حَسَنٌ

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஅலா ஆலிஹீ வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: [[மேலும் என்னுடைய இந்த உம்மத் 73 கூட்டங்களாகப் பிரியும். அவர்கள் அனைவரும் நரகத்திலே; ஒரு கூட்டத்தைத் தவிர. அப்பொழுது ஸஹாபாக்கள் வினவினார்கள்; அல்லாஹ்வின் தூதரே! அந்தக் கூட்டம் எது? அதற்கு அவர்கள்: "நானும் எனது தோழர்களும் இன்று எதிலே இருக்கின்றோமோ அதுவேயாகும்." என்று கூறினார்கள்]] இதை இமாம் திர்மிதி அறிவிக்கின்றார் (5/26). மேலும் இதற்கு உறுதுணையாக முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் இருக்கின்றது. அதை இமாம் அபூதாவுத் (4597); மற்றும் இமாம் அஹ்மத் அவர்களும் (4/102) அறிவிக்கின்றார்கள். மேலும் அதற்கு உறுதுணையாக வேறு பல ஹதீஸ்களும் உள்ளன. எனவே இது ஹஸனான ஒரு ஹதீஸாகும்.

وَقَوْلُهُ: ((كُلُّهَا فِي النَّارِ))، فِيْهِ بَيَانُ حَالِ أَهْلِ الْأَهْوَاءِ وَجَرْحُهُمْ

மேலும் "அவைகள் அனைத்தும் நரகத்திலே" என்ற அவர்களின் கூற்று; மனோ இச்சையின்படி செயற்பட்டவர்களுடைய நிலையைப் பற்றிய தெளிவும், அவர்களுக்கான குறைமதிப்பும் இதிலே காணப்படுகின்றது.

50. فَإِذَا قِيْلَ لَكَ: مَنْ أَضَلُّ الْفِرَقِ الَّتِي تَدَّعِي الْإِسْلَامَ؟ فَقُلْ: هُمُ الْبَاطِنِيَّةُ، وَالرَّافِضَةُ، وَالْجَهْمِيَّةُ، وَغُلَاةُ الصُّوْفِيَّةِ.

50. கேள்வி: இஸ்லாத்தை வாதிடும் கூட்டங்களில் மிக வழிகெட்டது எது? என்று உன்னிடத்தில் கேட்கப்பட்டால்,

விடை: அவர்கள் அல்-பாதினிய்யா, அர்-ராபிழா, அல்-ஜஹ்மிய்யா, மேலும் சூபிய்யாக்களில் அளவு கடந்து சென்றவர்கள் ஆவர். என்று நீ கூறு.